சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VII. } FEBRUARY and MARCH 1912. { NO. 7 - 8.
தொகுதி எ. } பிப்ரவரி, மார்ச்சுமீ 1912. { பகுதி எ - அ.

சக்ரவர்த்தினி.

அரனயனரி என்னும் மும்மூர்த்திகளின் கருணை விசேடத்தால் இப்பத்திரிகை எமது வாயிலாக இன்று வெளிவந் திருக்கின்றது.

இப்பத்திரிகை முதன் முதல் 1905ம் வருடத்தில், சின்னாள் லோகோபகாரி பத்திரிகையை நடாத்தி வந்த பிரஹ்மஸ்ரீ P. வைத்தியநாத ஐயரவர்களால் ஆரம்பஞ் செய்யப்பட்டது. பின்னரிதனைப் பிரஹ்மஸ்ரீ P. S. அப்புசாமி ஐயர் இவ்வருடம் ஜனவரி மாதம் வரையில் நடாத்தி வந்தனர்.

இது சென்ற நான்கு மாத காலமாகச் சில அசந்தர்ப்பங்களால் வெளிவராது நின்றுபோய்விட்டது. இதற்குக் காரணம் பத்திராதிபர் பத்திராசிரியர் அச்சிடுவோர் ஆகிய இவர்கள் வேறு வேறயிருந்தமையே யாம். மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டில் எமது பேரால் இப்பத்திரிகையைப்பற்றி டிக்ளரேஷன் பெறுவது பற்றியும் சிறிது காலந் தாமத மாயிற்று.

இன்று முதல் எமது வாயிலாக நடைபெறு மிப்பத்திரிகைக்குப் பத்திராதிபரும், பத்திராசிரியரும், அச்சிடுவோரும் யாமேயா யிருத்தலின் இஃதினிக்கிரமமாக நடைபெறுமென்பது, யாம் மேற்கொண்டு இரண்டு வருட காலமாகக் கிரமமாக நடத்திவரும் லோகோபகாரியே சான்று பகரும்.

முன்பு இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாக விருந்து இதனை யாதரித்து வந்த பத்திரிகாபிமானிகள் இனிமேலு மிதனை யாதரித்து வருவார்களென்னும் நம்பிக்கையினு லிதனைப் பிரசுரஞ் செய்திருக்கின்றோம். தேசாபிமானமும், பாஷாபிமானமும், மதாபிமானமுமுள்ள நமது நேயர்கள் இதனை ஆதரித்து வருவார்களென்று நம்புகின்றோம்.

இப்பத்திரிகைக்கு நிரம்ப அறிவாற்றலமையப் பெற்றுள்ள தமிழ்ப்பண்டிதர்களும், ஆங்கிலப்பாஷையிற் றேர்ந்துள்ள புத்திமான்களும் விஷயதானஞ்செய்ய ஒப்புக்கொண் டிருக்கின்றார்கள்.

இப்பத்திரிகை, யாதொரு தூஷணமு மின்றி யாவருக்கும் ஒற்றுமையையும், யுக்தி புத்தியையும், பக்தி விசுவாசத்தையும், வைராக்கிய ஞானத்தையும் விளைவிக்கக் கூடியவாறாக நடைபெற்றுவரும்.

இப்பத்திரிகை நம்நாட்டுச் சிறுவர்கட்கும் சிறுமியர்கட்கும் நல்லொழுக்கத்தைப் போதிப்பது வாயிலாக இப்பிறவிப்பேற்றை யடைவிப்பதற் கேதுவாயு மிருக்கும்.

இவ்வாறு நடைபெறு மிப்பத்திரிகையைப் பத்திரிகாபிமானிகள் பராமுகமாக விடாது ஆதரித்துவருமாறு வேண்டுகின்றோம்.

இஃதென்ஞான்றும் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

கடவுள்.

நாம் வசிக்கும் உலகம், தேர் முதலியனபோன்று காரியவடிவமாக விருத்தலின், இதற்கொரு கர்த்தா அத்தியாவசியகமாக இருத்தல் வேண்டும். ஜடமாயும் அவயவமுடையதாயுமிருக்கும் பொருள் காரியப்பொருளென்று கூறப்படும். உலகமானது ஜடமாயும் அவயவமுடையதாயு மிருத்தலின், அது காரியப் பொருளென்பது திண்ணமாம்.

உலகம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் ஐம்பெரும் பூதங்களின் கலப்பு வடிவாக இருக்கின்றது. நாம் செவியால் ஆகாயத்தின் குணமான சத்தத்தையும், துவக்கால் வாயுவின் குணமான பரிசத்தையும், கண்ணால் தேயுவின் குணமான ரூபத்தையும், நாக்கால் அப்புவின் குணமான ரசத்தையும், மூக்கால் பிருதிவியின் குணமான கந்தத்தையும் சிறப்புவகையாக அறிகின்றோம். அங்ஙனமறிவதாலே நாம் உலக யாத்திரைக் கேதுவான காரியங்களைச்செய்ய முயலுகின்றோம். இந்தச்செவி முதலிய இந்திரியங்கள் வெளிவிஷயங்களை யறிவதற்கு நமக்குச் சாதனமாக விருக்கின்றன. சப்த முதலியவற்றையறிவதற்குச்சாதனமாயுள்ள

செவிமுதலிய இந்திரியங்கள் வாயிலாகவரும் சுகதுக்க முதலிய வற்றையறிவதற்கு மனமென்னு மோரிந்திரியமிருக்கின்றது. இவ் விந்திரியமில்லாவிடத்து நாம் ஒருகாரியமுஞ்செய்வதற் குரியவரா கோம். சப்தமுதலியவற்றை யறிவதற்குச் சாதனமாயுள்ள செவி முதலிய வெளியிந்திரியங்களும், சுகமுதலியவற்றை யறிவதற்குச் சாதனமாயுள்ள மனமாகிய உள்ளிந்திரியமும் எதில் நின்று தத் தம் வியாபாரத்தைச் செய்கின்றனவோ அஃது உடம்பெனப்படும். ஐம்பெரும் பூதங்களும் ஆறிந்திரியங்களும் உடம்பும் கூடியது உலகமாம். இது ஜடமாயும் அவயவமுடையதாயு மிருத்தலின் காரியமாம். இதற்குவேறாகவுள்ள நாமென்னுமுயிர் சித்தாய் அவ யவ மற்றதாயிருத்தலின், அது காரிய வடிவமன்றாம். ஐம்பெரும் பூதங்களும், அவற்றின்காரியமாகிய ஆறிந்திரியங்களும், ஐம்பெரு ம் பூதங்களின் காரியமாய் ஆறிந்திரியங்களு மிருத்தற் கிடமாயுள் ள வுடம்பும் நம்மாற் செய்யப்பட்டனவன்றாக விருத்தலின், இவற் றைச் செய்த பொருள் கர்த்தாவென்று சொல்லப்படுகின்றது. இக்கர்த்தா கடம் படம் முதலியன போன்று ஜடப் பொருளாயிருக் கலாமென்பது ஒருவகையானும் பொருந்தாது. இந்த உலகத்தின் அமைப்பு ஒரு சிறந்த கடிகாரத்தினமைப்புப் போன்றிருத்தலின், இதற்குக் கர்த்தாவாகவுள்ளது ஜடப்பொருளாமென்று எவ்வாறு கருதுதல் கூடும்? ஒரு சிறந்த கடிகாரத்தைச் செய்யும் புருஷன் சிறந்த வறிவுடையவனாக வன்றோ விருக்கவேண்டும். அங்ஙனமே சூரியக்கிரகணம் சந்திரக்கிரகண முதலியன குறிப்பிட்ட காலங்க ளில் தவறாது நிகழ்வனவற்றை நோக்குமிடத்து, இவற்றைப் படைத்து நடத்தும் புருஷன் நம்மினும் பேரறிவாளனாக விருத் தல் வேண்டும். சூரியன், சந்திரன் முதலிய பொருள்களைப் படை த்தல் நம்மனோர்க்கு முடியாதாகலின், அவற்றைப் படைத்தவன் நம்மினும் மேலாய புருஷனாயிருத்தல் வேண்டுமென்பது முடி வான துணிபாம். சொப்பனம் மனதிற்றோன்றி விளங்கி யழி வது போன்று உலகமும் அவனிடத்திற் றோன்றி விளங்கி யழிவதாக விருத்தலின், அவன் நம்மிடத்திற் பெறக்கூடிய பொருள் சிறிது மின்றாம். நாம் ஏதாவதொரு பொருள் அவனுக் கீவோமாயின், அவனுக்குரிய தாகாததையன்றோ ஈயவேண்டும். ஒவ்வொரு பொருளும் உண்மை நோக்கில் அவனுக்குரியதாகவே யிருத்தலின், அவனுக்கு நாம் எதனைக்கொடுக்க வுரியவராவோம்?

நம்மிடத்தொரு பயனையுங் கருதாது நமக்குப் பயன்படும்படி ஐம் பெரும் பூதங்களையும் ஆறிந்திரியங்களையும் உடம்பையும் படைத்த இறைவனுக்கு நாம்செய்யும் கைம்மாறு யாதிருக்கின்றது?

நாம் இந்த உண்மையைபறியாது இஃதென்னுடையது, அஃதவனுடையது என்றற் றொடக்கத்தனவாக வியவகாரஞ் செய்து, கடவுளைக் கனவிலும் நினையாது போகின்றோம். நாம் சன்மார்க்கத்திலொழுகி நற்கதி பெறுதற் பொருட்டே உலகம் இறைவனால் படைக்கப்பட்டதென் றுணர்வோமாயின், நாம் கடவுளைக் கனவிலும் மறவாது மனத்தால் தியானித்தலும் வாக்கால் துதித்தலும் காயத்தால் வணங்குதலும் செய்து வருவோம். உலகம் காரியவடிவமாக விருத்தலின் இதற்கொரு கர்த்தா அத்தியாவசியகமாக விருத்தல் வேண்டும்; அக்கர்த்தா உலகிலும் உயிரினும் ஒரு வகையால் வேறாய்ப் பிறிதொரு வகையால் வேறாகாது பேரறிவையும் பேராற்றலையு முடையவனாகவிருத்தல் வேண்டுமென்னுந் தீர்மானத்தோடு பழி பாவங்களுக்குப் பயந்து நடந்து வருவோமாயின், நாம் அவனதுகருணைக்கு நிச்சயமாகப் பாத்திரராவோம்.

"வானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப் புரந்து மாற்ற வல்ல, கோனே யென்னைப் புரக்குநெறி குறித்தா யிலையே கொடியேனைத், தானே படைத்திங் கென்னபலன் றன்னைப் படைத்தா யுன்கருத்தை, நானே தென்றிங் கறியேனே நம்பி னேன்கண் டருள்வாயே" என்று ஸ்ரீ தாயுமானவர் கூறியிருப்பது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

ஒழுக்கம்.

இவர் தக்காரென்றும் இவர் தகவிலரென்றும் யாம் கூறுவதற்குக்காரணம் ஒழுக்கமுடைமையும் ஒழுக்கமின்மையுமாம். ஒழுக்கமுடையவர் தக்காரென்றும் ஒழுக்கமில்லாதவர் தகவிலரென்றும் கூறப்படுகின்றனர். ஒழுக்கமுடையவர் உயர்ந்தோ ரேற்பனவற்றைக் காலதேச நிமித்தங்கட்குப் பொருந்துமாறாகச் செய்வர். ஒழுக்கமில்லாதவர் இது செய்பத்தக்கது; இது செய்பத்தகாதது என்று பகுத்துணராது, தாம் விரும்பியவற்றை யெல்லாஞ்செய்து இம்மைக்குரிய பழிக்கும் மறுமைக்குரிய பாவத்திற்கு முரியவராக விருப்பர். கடவுளருளுக்குப் பாத்திரமாயிருத்தல் ஒழுக்க

மில்லாதவருக் கொருபோதுங் கூடாது. ஒழுக்கமுடையவர் இம்மையில் புகழ் பொருள் புண்ணியங்களையும், மறுமையில் புண்ணிய லோகத்தையு மடைதற்குரிபவராவர். ஒழுக்கமில்லாதவர் இம்மையில் பழிபாவங்களையும், மறுமையில் நரகலோகத்தையு மடைதற் குரியவராவர். ஒழுக்கமாவது அறிவுடையோர் நிந்தித்துக் கூருத வாருக நடத்தலாம். ஒருதேசத்தாரது ஒழுக்கம் மற்றொரு தேசத்தார்க்குப் பொருந்தாதிருப்பதுபற்றி, ஒருதேசத்தார் மற்றொரு தேசத்தார் ஒழுக்கத்தைப் பழிப்பது ஒருபோதுங்கூடாது. எந்தெந்தத் தேசத்திற்கு எதெது ஒழுக்கமென்று அறிவுடையாரால் கருதப்படுகின்றதோ அந்தந்தத் தேசத்திற்கு அததுவே ஒழுக்கமாம்.

"நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ, டின்னுத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ, டொப்புர வாற்ற வறிதலறிவுடைமை, நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ், சொல்லிய வாசார வித்து" என்று ஆசாரக்கோவை கூறுவதனுல், பிறர்செய்த வுபகாரத்தை மறவாமையும், பிறர்செய்த தீங்கினைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிறர்க்குத்தீமை பயவாத இனிய சொற்களைக் கூறுதலும், மெய், வாய், கண், மூக்கு, செவி, மனமென்னு ஆறிந்திரிய வியாபாரங்களையும் நன்ருகவுடைய மனிதர் முதல் எறும்பு புழு ஈருகவுள்ள ஜீவகோடிகளுள் எந்தப் பிராணிக்கும் வேண்டுமென்று தீயனவற்றைச் செய்யாமையும், அறநூல் முதலியவற்றைத் தக்காரிடத்துக் கசடறக்கற்றலும், உலக நடையினைத் தகுதிபாக வறிதலும், கல்விகேள்விகளினுலாய அறிவோடு உண்மை யறிவுடைமையும், தம்மை யடைந்தவரை அறியாமையினின்றும் நீக்கித் துன்பமடையாவாறு காக்கும் நல்லினத்தாரோடு சிநேகஞ் செய்தலும் ஆகிய இவ்வெட்டும் ஒழுக்கத்திற்குக் காரணங்களாமென்று பெறப்படுதலின், ஒழுக்கமுடையராக வேண்டுமென்று விரும்புகின்ற ஒவ்வொருவரும், நன்றியறிதல் முதலியவற்றை மேற்கொண்டொழுகுதல் வேண்டும். நன்றியறிதல் முதலிய வெட்டனுள் ஒன்று குறைந்தாலும் ஒழுக்கம் குறைந்துபோம்.

ஒருவன் வெளிவேடத்தால் ஒழுக்கமுடையனுகக் காணப்படினும், அவனிடத்து நன்றியறிதல் முதலியன வில்லாதுபோமாயின், அவன் உண்மையில் ஒழுக்கமில்லாதவனேயாவன். மெய்

யுணர்வின்றிக் கொக்குப்போன்று கண்ணை மூடிக்கொண்டிருப்பவனையும், வெளிவேடத்தால் ஒழுக்க முடையவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளுகின்ற வனையும், ஒழுக்க முடையவ னென்று கருதுதல் ஒருபோதுங்கூடாது. ஒழுக்கம் மனம் வாக்குக் காயங்களை யடக்கினவர்க்கன்றி மற்றவர்க்குச் சித்திப்பது கூடாதென்பது பெரியோர்களது நிச்சயமாக விருத்தலின், மனத்தினையும், வாக்கினையும், காயத்தினையும், பயனில்லாதனவும், பழிபாவங்கட் கேதுவாவனவுமாகிய வியாபாரங்களிற் செலுத்தாது இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயக்கும் வியாபாரங்களிற் செலுத்துதல் அத்திபாவசியகமாம். மனம் வாக்குக்காயங்களைத் தக்கவாறாக வடக்கப் பழகுகின்றவர்களுக்கே ஒழுக்கஞ் சித்திப்பதாம். "பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு, நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோ யின்மை, யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும், ஒழுக்கம் பிழையா தவர்!" என்று ஆசாரக்கோவை கூறுதலால் ஒழுக்கத்தின்பயன் பிறப்பு நெடுவாழ்க்கை முதலியன வென்று விளங்குதலின், நாம், ஒழுக்கமுடையவ ராவோ மாயின் பிறப்பு நெடுவாழ்க்கை முதலியவற்றைத் தவறாது பெறுவோம்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்கம், உயிரினு மோம்பப்படும் (ஒழுக்கம் எல்லார்க்குஞ் சிறப்பினைத் தருதலான், அவ்வொழுக்கம் உயிரினும் பாதுகாக்கப்படும்)" என்று திருவள்ளுவர் கூறுவது இங்கு நன்கு கவனித்தற்பாலதாம்.

உறுதி மொழித் தொகுதி.

தெய்வ சிந்தனை செய்வது நலமாம்.
ஞானிகள் நேசம் நன்மையெ லாந்தரும்.
அடக்க முடையா ரரனடி காண்பர்.
கல்வி யறிவிலார் கடையவ ராவர்.
பணிவுடை யவர்க்குப் பகைவரே யில்லை.
இன்சொற் கூறல் எவர்க்கும் நன்று.
தன்னைப் புகழுதல் தகுதி யன்று.
பொறுமை யுடையார் புகழெலாம் பெறுவர்.
பிறர்மனை விரும்புவோன் பீடிலா தொழிவன்.
கற்புடை மாதே கதியெலாம் பெறுவள்.

சூடாலை.

முதலங்கம்.

முதற்காட்சி.

இடம்:—மாளவதேசம்—அரசனது அந்தப்புரம்.

பாத்திரங்கள் - சிகித்துவஜன் - சூடாலை.

காலம் - பிற்பகல் - மாலை.

சிகித்துவஜனும் சூடாலையும் அந்தப்புரத்திலிருந்து சம்பாஷிக்கிறார்கள்.

சிகித்துவஜன்:—பிரியே! சூடாலை! நந்தவனத்திற்குப்போவோம்; வா?

சூடாலை:—அன்ப! போகலாம்: இப்போதெனக்கொரு சந்தேக முண்டா யிருக்கின்றது. அதுபற்றிச் சிறிது தங்களோடு பேச வெண்ணுகிறேன்; உத்தரவானல் பேசுகிறேன்.

சிகி:—காதலி! நீ இன்றையதினம் பேசுவது எனக்குப் பேராச்சரியத்தைத் தருகின்றது. ஒரு நாளும் நீ இவ்வாறு பேசியதில்லையே! நீ சொல்லவெண்ணி யிருப்பதை விரைவாகச் சொல்.

சூ:—லோகநாயக! தாங்களென்னைச் சுராட்டிரதேசத்தில் மன்னர்பலரும் மதிமயங்கி நிற்க, சிவதனுசுக்கொப்பான தனுசை வளைத்து ஜயமுரசொலிக்க, விவாகஞ்செய்து இங்கழைத்துவந்ததுமுதல்இதுபரியந்தம் நாம் மனமொத்து வாழ்ந்து வந்தோம். நமக்கு ஒரு குறைவொழியவேறுகுறைவு ஒன்றுமில்லை. நமக்குத் திறை கொடாத மன்னரும், எதிர்த்துப் போர்புரிய வெண்ணும் மன்னரும் இருக்கின்றார்களென்றெண்ணுவதற்கு இடமே காணேம். உம்முடைய நீதியே உலகை யொத்துவாழச்செய்கின்றது. நமது தேசத்தில் அகாலமரணம், பஞ்சம், கொடியநோய்கள் முதலியன வில்லாமையே தங்களது நீதியை நன்றாகத் தெரிவிக்கின்றது. இவ்வாறெல்லாமிருந்தும் முகிலிற்றோன்றி மறையுமின்னல் போல ஓரெண்ணம் சிலகாலமாக என்மனதில் அடிக்கடி தோன்றி மறைகின்றது. அதனைத்தங்களிடத்தில் சொல்ல வேண்டுமென்றெண்ணி யிருந்தேன்; சமயம் வாய்க்காமையால் சொல்லாதிருந்தேன். இப்போது சமயம்வாய்த்தபடியால் சொல்லுகிறேன்.

சிகி:—புத்திரப்பேறு இல்லையென்பது பற்றியா சொல்லப் போகின்றாய்?

சூ:—ஆம்! ஆனால், அந்தப் புத்திரப்பேறு வேறு.

சிகி:—எந்தப்புத்திரப்பேற்றை விரும்பிச் சொல்லப்போகின்றாய்.

சூ:—ஞானமாகிய புத்திரனை நாம் பெறவேண்டுமென்பது என்னுடைய பிரார்த்தனை.

சிகி:—பிரியே! இன்னொருதரஞ்சொல். ஞானமாகிய புத்திரனையா நாம் பெறவேண்டும்?

சூ:—ஆம், ஞானமாகிய புத்திரனைப் பெற்றாற்றான் நாம் இனிப் பிறவாத நிலையினை யடைதல்கூடும். உடம்பிற்புழுப்போன்று பிறக்கும் புத்திரனால் நமக்காவது யாதிருக்கின்றது? புத்திரனால் ஒருகாலத்தும் சுகமுண்டாவதில்லை. குசேலமாமுனிவரும் "மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளுந் துன்பம், விதலைநோ யடையிற் றுன்பம் விபன்பரு வத்துந் துன்பம், கதமுறு காலதூதர் கைப்பற்றில் கணக்கில் துன்பம், இதமுறல் எந்நாள் சேயால் எற்றைக்குந் துன்பமானல்" என்று தமது பத்தினியான சுசிலைக்குக் கூறியிருக்கின்றார். நமக்கிப்போதுமூப்பு வருந்தருணமாயிருக்கின்றது. மூப்பு வந்து முதிர்ந்தபோது நாம் ஒன்றற்கும் உதவியாகாது போவோம். முதலாவது மனம் விருப்பு வெறுப்புக்களால் சூழப்பட்டு, வசப்படாதுபோம்; அப்போது வைராக்கியமாக விருத்தற்கு முடியாது. வைராக்யமில்லாவிட்டால் மனத்தை வசப்படுத்துதல் முடியாது. இப்போதுவசப்படாதோடு மனமா அப்போது வசப்படப் போகின்றது. ஆகையால், நாம் சீக்கிரமாக ஞானமாகிய புத்திரனைப் பெறப் பிரயத்னப்படவேண்டும்.

சிகி:—மனத்திற்கினிய மங்கையே! ஞானமாகிய புத்திரனைப் பெறுவது அவசியந்தான். நமது குலம்விளங்க ஒரு சற்புத்திரனைப் பெற்றபிறகு, ஞானமாகிய புத்திரனைப் பெறமுயற்சி செய்வோம். ஞானமாகியபுத்திரனைப் பெறவேண்டு மென்னுமெண்ண முனக்கிப்போ துண்டாயதற்குக் காரணம் என்ன?

சூ:—எனது தந்தையான சுராட்டிர தேசத்தரசன் மகா தத்துவ ஞானி யென்பது தங்களுக்குத் தெரியாததன்றே!

எப்போதும் எனது தந்தையார் தம்மை வந்து பணிந்து உப தேசிக்குமாறு பிரார்த்திக்கின்றவர்க்கு "சகத்தின் வாழ்வைச் சதமென வெண்ணியே, மிகுத்த தீமை விளைய விளைக்கின் றேன், அகத்துள் ஆரமு தாமைய நின்முத்திச், சுகத்தில் நான் வந்து தோய்வதெக் காலமே" என்னும் பாடலைச் சிந்தித்தி ருக்கும்படி சொல்லுவார். அதனைக் கேட்டுவரும் நான் ஒரு நாள் முத்திச் சுகம் எதனுல் வருமென்று கேட்டேன். அதற் கவர் அஃது உனக்குக் குடும்பந் துக்கரூபமென்றுதோன்றிய போது வரும். குடும்பந்துக்கரூபம் என்பது ஞானம் வந்தவி டத்தில் நன்ருக விளங்கும். ஞானமாகிய புத்திரனைப் பெருத வர்கள் எவ்வகையாலும் முத்திச் சுகத்தை யடைவதில்லை என்று கூறினர். அதனுற்ருன் நான் ஞானமாகிய புத்திர னைப் பெறவேண்டு மென்று சொல்லுகிறேன். நமது குலம் விளங்க நற்புத்திரனைப் பெறவேண்டு மென்பது இப்போது முடியாத காரியமாம். புத்திரன் பிறந்தாலும் அவன் குண முள்ளவனுக விருப்பானென்பது கூடுமோ? துரியோதனன், துச்சாதனன், கர்ணன், சகுனி யென்னுமிந் நால்வரும் தமது குலத்தை விளக்கினரோ? இவர்கள் துஷ்ட சது ஷ்டய ரென்றன்ருே சொல்லப்படுகின்ருர்கள். அத் தன் மையனுய புத்திரன் பிறப்பதினும் பிறவாதிருத்தலே நல மன்ருே? சுபுத்திரன் பிறந்தாலும், அவனுல் சுக முண்டா வதில்லை யென்பதற்குச் ஸ்ரீராமனே தக்க சாட்சி யாவன். ஸ்ரீராமனுலன்ருே தசரத னிறந்தான். உலகமுழுது மொரு குடை நிழலிலாண்ட வரசர் உலகந் தோன்றிய நாள்முதலா கப் பலரிருக்கலா மன்ருே? இப்போது அவர்கள் சந்ததி யின்னுரென்று குறிப்பிட்டு நிச்சயமாகச் சொல்ல முடியு மோ? இவற்றையெல்லாம் தாங்கள் தீர்க்கமாக வாலோசித் துப் பார்க்கவேண்டும். நாம் ஞானமாகிய புத்திரனைப் பெற ஒரு பரமாசிரியரைத் தஞ்சமாகவடைய முயற்சிசெய்வோம்.

சி:—அது பற்றி யோசிக்கலாம்; இப்போது அவசரமென்ன? நேர மாய்விட்டது. நீயும் வரக்கூடுமானுல் வா, போவோம்.

சு:—இன்றைய தினம் நான்வரவில்லை. தாங்கள் மாத்திரம் போங் கள்.

(போகிருர்கள்).

(வரும்).

ஸ்ரீ சதாசிவப் பிரஹ்மேந்திரர்
சரித்திரச் சுருக்கம்.

சதாசிவப் பிரஹ்மமென்று பிரசித்திபெற்ற சதாசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஓர் அரிய ஜீவன்முக்தர்; தென்னிந்தியாவில் இராஜயோக பரம்பரையிற் கடைசியாகத் தோன்றியவர். கரூர்ப் பட்டிணத்தருகில் ஏறக்குறைய 150 வருடங்கட்கு முன்னர் வாசஞ்செய்தவர்; அத்தியயனகாலத்திலேயே மிக நுண்ணிய அறிவுடையராயிருந்தவர். காவேரி நதி தீரத்துள்ள திருவிசை நல்லூரென்னுங் கிராமத்தில் கல்விபயின்றவர். அப்போது அக்கிராமத்தில் இராமபத்திரதீக்ஷிதரும், அய்யாவாளென்று பிரசித்திபெற்ற ஸ்ரீவேங்கடேசரும், மகாபாஷியம் கோபாலகிருஷ்ண சாஸ்திரியாரும் வித்தியார்த்திகளாயிருந்தனர். இயற்கையிலேயே நிரம்ப அறிவாற்றலமைந்துள்ள இவர்களினும் சதாசிவப்பிரஹ்மேந்திரர் மிகு சூட்சும அறிவுடையவராக விளங்கி வந்தனர். அவர் தமது வித்தியாகுருவுடன் பல விஷயங்களைக் குறித்து வாதஞ்செய்வதாயிருந்தனர்; அவ்வமயங்களில் அவர் தமது குருவினும் மேம்பட்ட யுக்தி புத்தியுடையவராக விளங்கினர். அவரது வித்தியாப்பியாச முடியுங்காலத்தில் அவர் பத்தினி பருவமடைந்ததாகக் கேள்விப்பட்ட அவரது தாயார் அன்று விசேஷபோஜனம் சமைப்பதாயினர்.

சதாசிவப் பிரஹ்மம் வழக்கம்போல் வீட்டிற்கு வந்த காலத்தில் போஜனகாலம் மேற்சொன்ன காரணத்தால் தாழ்த்தது. தாழ்த்தது கொண்டு அவர் அடியில் வருமாறுயோசிக்கலாயினர்:—

சம்சார முளை கிளம்புவதற்கு முன்னரே போஜன காலந் தாழ்த்தது; அது முளைத்தாலுண்டாந் துன்பத்திற்கோ வளவிடையாததாகும் என்றிவ்வாறு தீர்க்காலோசனைசெய்துசம்சாரதுக்கம் மிகப்பொல்லாததென்றதைவிடுத்துடனே ஞானகுருவையடையப் பிரயாணப்பட்டனர். அன்று முதற்கொண்டு உலகத்திற் சிறிதுமின்பமின்றென்று அதனை வெறுத்து உலகிற்றுன்பானுபவிகளாயுள்ள ஜீவர்களுக்கு இரக்கங் கொள்வாராயினர். ஜாதி மத வித்தியாசமின்றி ஜீவகோடிகளைச் சமபாவனையாகப் பாவிப்பதும், யாவர் யாது கொடுப்பினும் அதனை வாங்கியுண்பதுமாயிருந்தனர். ஒருவரும் அன்னங்கொடாத காலத்தில் வீதியிலெறிந்து கிடக்கும்

எச்சிலிலைகளிலுள்ள வற்றை யுண்பர். இவ்வாறொழுகு மிவரைக்கண்ட ஜனங்களிவருடைய அதிதீவிர பக்குவத்தை யறியாது இவரைப் பயித்தியம் பிடித்தவரென்று தீர்மானித்திருந்தார்கள். இவர் அதி விரைவாகப் பரமசிவேந்திர சரஸ்வதி யென்னுங் குருவை யடுத்து அவரிடத்து யோகாப்பியாசம் பயிலுவதாயினர்; விரைவாக வித்தையிலும் யோகத்திலும் தேர்ச்சியடைந்தனர். இக்காலத்திற்றான் அவர் கிரந்தங்களுங் கீர்த்தனங்களு மியற்றியிருத்தல் வேண்டும். இக் கிரந்தங்களுங் கீர்த்தனங்களும் அவருடைய கொள்கையின்னதென்பதை நன்கு விளக்கும். ஆத்மாநுபவத்தை யடைந்த யோகியின் கீர்த்தியை விளக்கிக் காட்டும் 62 சுலோகங்களடங்கிய ஆத்ம வித்தியாவிலாச மென்னுங் கிரந்தமும் அவற்றுளொன்றும். இவர் தமது குருவினிடத்து வருபவரையெல்லாம் பற்பல கேள்விகள் கேட்டு அவமானப்படுத்திக்கொண்டு வருவர்; அவ்வாறு வருங்கால்ஒருகால் குருவானவரிவரை யதற்காக வெகுண்டு எப்போது வாய் மூடுமோவென்று கூறியவளவில், அவர் தமது விவேகமின்மையை யுற்றுநோக்கி, அன்று முதல் மௌன விரதமேற்கொள்பவராய்த் தமது குருவை வணங்கித் தமது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டி அவரது உத்தரவு பெற்றுப் பரதேசியாகித் தமது ஜனனப்பிரதேசத்தை விட்டு அமராவதியின் காவேரி நதி தீரத்திற் சஞ்சரிப்பாராயினர். ஆங்கு ஆத்மானுபவமிக்குறச் சமாதிபுரிந்து வருவதும், விஷயமொன்றுமின்றியே உன்மத்தரைப்போற் றிரிபவருமாயிருந்தனர். ஆண்டுள்ள காடுகளிற் சென்று ஜனங்களுக்குப் புலப்படாமல் பல நாள் வெளிவராமல் சமாதி கூடியிருப்பர்; பலகால் நதியின் மணல் மேடுகளில் அறிதுயில் கொண்டிருப்பர்; ஒருகா லவ ரவ்வாறிருக்கும்போது காவேரிநதியிற்றிடீரென்று பெருவெள்ளம் வந்து, அவரையடித்துக்கொண்டுபோய் மணலிற்புதைத்து விட்டது. இதைக் கரையின் மீதிருந்த ஜனங்கள் கண்ணுற்றுத் தமது பூஜ்யரான யோகீசுவாருக்கு அபாயம் வந்துவிட்டதென்று கிலேசப்பட்டு அவரை மீட்கக்கூடாமல் வீட்டிற்குப் போயினர். மூன்று மாத காலங்கழிந்த பின்னர் மழைக்கால முடிவாக நதியில் ஜலம் வடிய இராஜாங்க வேலையாட்கள் மணலை வாரத்தொடங்கினர். அவர்களுள் ஒருவன் தன் மண் வெட்டியை மணலிற் பாய்ச்சும்போது அது தடைப்பட்டது; அவனதனைப் பிடுங்கிப் பார்க்கும்போது

அதில் இரத்தம் பட்டிருப்பதைக்கண்டு யாவரும் பயமும் அதிசயமுங்கொண்டு அவ்விடத்திற் சுற்றிலும் பெரும்பள்ளந்தோண்டினர்; தோண்டியபோது ஆண்டுச் சதாசிவப் பிரஹ்மேந்திரர் சமாதியிலிருக்கக்கண்டு பயபக்தியுடன் ஆச்சரியமுங்கொண்டவரைச் சமாதியினின்றும் பகிர் முகப்படுத்தினர். அவர் துயிலினின்றும் விழித்தவர்போல் எழுந்து தமக்கு யாதொன்றும் நேராததுபோலத் தம்வழியே சென்றனர்.

பின்னொருகால் கரூரையடுத்துள்ள ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் தன் வயலிலுள்ள நெல்லை யறுத்து நேரமாய் விட்டமையின், அவ்விடத்திலேயே அம்பாரம் போட்டு இராவிற் காவல் வைத்துவிட்டுப் போயினன். அன்றிராத்திரி சதாசிவப் பிரஹ்மேந்திரர் அவ்வழியேவர, இரவு மிகவுங் கறுக்கலாக விருந்தமையின், நெல்லம்பாரந் தடுத்தமைபற்றி யிடறி விழுந்து விட்டனர். இதனைக் கண்ணுற்ற காவற்காரர் நெல்லைத் திருடவந்த திருடனென்றிவரைக்கருதித்தடி கொண்டடிக்கக் கைகளை நோக்கவும் நோக்கிய கைகளிறங்காமல் நின்ற விடத்திலேயே விடியற்கால பரியந்தம் நின்று கொண்டிருந்தனர். விடிந்த பிறகு யஜமானன் வந்தபோது அவனிடத்து வேலையாட்கள் நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்லியபோது சதாசிவப்பிரஹ்மம் அவ்விடத்தை விட்டகன்றனர். அகன்றபோது வேலையாட்கள் தமது கைகள் கீழே யிறங்கத் துன்பத்தினின்றும் நீங்கி யுய்ந்தனர்.

மற்றொருகால், இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் அவ்வூர் வந்திறங்கினார்கள். அப்போது தலையாரிகள் சமையலுக்காக அவர்களுக்கு விறகு கொண்டுவரக் காட்டிற்குப்போய் விறகு வெட்டிச் சுமைகளாக்கித் தங்கள் தலைமேற் றாக்கிக்கொண்டு ஒரு சுமையெடுப்பதற் காளில்லாமையை நோக்குஞ் சமயத்தில், சதாசிவப் பிரஹ்மம் தற்செயலா யவ்வழிபோவாராயினர். அவரைத் தலையாரிகளிழுத்துக்கொண்டு வந்து விறகு சுமையை யவர் தலை மீது வைத்து அவரைத் தம்மோடு கூடயிழுத்துப்போயினர். தலையாரிகள் தங்கள் சுமைகளைக்குறித்த விடத்திற்போட்டனர். கடைசியில் சதாசிவப் பிரஹ்மம் தமது சுமையை யவற்றின் மேல் போட்டனர். அதனால் அங்கிருந்தவரியாவரும் அதிசயிக்குமாறு அச்சுமைகள் தீப்பற்றி யெரிந்தொழிந்தன. இத்தகைய அற்புத மூர்த்தி

யாய் விளங்கிய இம் மகா சித்தபுருஷரைச் சாதாரண ஜனங்கள் பயித்தியக்காரரென்று மதித்திருந்தனர். சிறு பிள்ளைகள் அவரைப் பரிகாசஞ்செய்வதும் அவரைச் சுற்றிநின்று ஆடுவதும் பாடுவது மாயிருந்தனர். அவரும் தமக்குக் கிடைப்பனவற்றை யவர்கட்கும் பகுத்துக்கொடுப்பர்; இவ்வாறிருக்கும்போதொருநாள், அச் சிறு பிள்ளைகள் மதுரையில் நடக்கும் ரிஷபவாகநோற்சவத்தின் மகிமையைத் தமது தந்தைமார் சொல்லக்கேட்டு அத்திருவிழாவைக் காண ஆசைகொண்டு அதிவினயத்துடன் சதாசிவப்பிரஹ்மத்தை மதுரைக்கழைத்துக்கொண்டுபோய்த் தங்கட்கு அவ்வுற்சவத்தைத் தரிசிக்குமாறு செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். இக்காரியமசாத்தியமானதென் றவர்கட்குத் தெரிந்திருந்தும் பரிகாசமாய்க் கேட்டனர். அவர் அச்சிறுவர்களைத் தமது தலையிலும் தோளிலும் முதுகிலுமேற்றிக்கொண்டு கணப்போது கண்களை மூடிக்கொள்ளும்படி சொல்லினர்; மறு கணத்தி லச்சிறுவர்கள் கண்களைத் திறந்தபோது அவர்கள் மதுரையிலிருந்து ரிஷபவாகநோற்சவத்தைத் தரிசித்துக் கொண்டிருப்பதாகக் கண்டனர். அச்சிறு பிள்ளைகள் விரும்புஞ் சிற்றுண்டி முதலியனவற்றை அவர்களுக்கு வேண்டுமான வரையிற் கொடுத்து அவர்களைக் களிக்கச்செய்து பொழுதுவிடியுமுன் அவர்களை அவர்தம் மிருப்பிடங் கொண்டு வந்து சேர்த்தனர். விடிந்தவுடன் சிறுவர்கள் தமது தந்தைமார்களிடஞ்சென்று நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லிச் சிற்றுண்டிகளையுங் காண்பித்தனர்.

இம்மகாநுபாவர் மகாசிவராத்திரி, கோகுலாஷ்டமி முதலிய புண்ணிய தினங்களில் ஒரே காலத்தில் பல க்ஷேத்திரங்களி லிருப்பதாகவுங் காணப்பட்டனர். அக்காலங்களில் அவர் தமதிருப்பிடத்திலிருக்கக் காசி இராமேசுவர முதலிய க்ஷேத்திரங்களிலிருந்து வந்தவர்கள் அத்திவ்விய தினங்களி லவ ரவ்விடத்தி லிருந்ததாகவுங் கூறுவாராயினர்.

படிப்பின்வாசனை சிறிதுமின்றிய வொருபிரஹ்மசாரி பிரஹ்மேந்திரருடைய கிருபையைப்பெறுமாறு அவர் செல்லுமிடங்களிலெல்லாம் அவரைப் பின்தொடர்ந்து செல்லுவாராயினர். கடைசியாக அப்பிரஹ்மசாரிமீ திரக்கங்கொண்டு சைகையினால் அவர் வாயில் திருப்திகாட்டி வந்தனர். ஒரு நாள் பிரஹ்மசாரி பிரஹ்மேந்

திரரைநோக்கித் தமக்கு ஸ்ரீரங்கத்திலுள்ள ரங்கநாதரைத் தரிசிப்பிக்குமாறு செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அங்ஙனமே பிரஹ்மசாரியைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னார். அவர் கண் விழித்தவுடன் ரங்கநாதர் சந்நிதியிலிருந்து ரங்கநாதரைத் தரிசிப்பாராயினர்; சதாசிவப் பிரஹ்மம் அத்தக்கணமே அவ்விடம் விட்டு மறைந்து விட்டனர்; பிரஹ்மசாரி அவரை யெங்குந் தேடிக்காணாமல் மெல்ல மெல்ல நெரூருக்கு வரவும் சதாசிவப் பிரஹ்மம் அங்குச் சமாதியிலிருக்கக் கண்டனர். சில காலத்திற்குப் பின்னர்ச் சதாசிவப் பிரஹ்மேந்திரர் அவர் மீது கருணை கூர்ந்து சில மந்திரங்களுபதேசித்தனர். அவற்றினநுஷ்டான பலத்தினால் அப் பிரஹ்மசாரி சமஸ்த புராணங்களிலும் விற்பத்தியுண்டாய்ப் புத்திமான்கள் நிறைந்த சபையில் வியாக்கியானஞ் செய்வாராயினர். அதற்காகக் கரூரில் அநேக ராஜாக்கள் பலவெகுமதிகளும் மானியங்களுந்தந்தனர். அந்நிலங்களை யவருடையசந்ததியாரிப்போதும்அனுபவித்து வருகின்றனர்.

பின்னொரு காலத்தில் பிரஹ்மேந்திரர் யதேச்சையாகப் போகுங்கால் மகமதியத் தலைவனொருவனிறங்கியிருந்த மார்க்கமாகப் போவாராயினர். அவன் தன்னுடைய பத்தினிகள் சகிதம் தனது அறையிலிருக்கும்போது இவர் நிர்வாணியாக அவ்வழியிற் செல்வதைப்பார்த்து மிகவுங் கோபங்கொண்டு தனது கத்தியால் அவரது ஒரு கையை வெட்டி விட்டனன். பிரஹ்மேந்திரர் இதைக் கவனியாமலே தமது வழியே போனார்; அதனைக் கண்ணுற்ற மகமதியத் தலைவனாச்சரியமுற்று அவர் மகானுபாவரென மதித்துத்தான் செய்த தீமைக்கஞ்சி அவர் பின்சென்றனன்; அவர் நெடுநாளைக்குப் பின்னர்த் திரும்பிப் பார்க்கவும், மகமதியத் தலைவன் தம்மைத்தொடர்ந்து வருவதைப்பார்த்து அவனை நோக்கி அவன் வருங்காரணத்தைக்கேட்டனர். அவன் தான் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு அவரை மிகுதியாகப் பிரார்த்தித்தனன். அவருக்கு நடந்த தீமையின்னதென்று தெரியாமையின், அவன் சொல்லிய வப்போதுதான் அவருக்குக் கைபோனது தெரிந்தது; தெரிந்தவுடன் தமது மற்றோர் கையால் முடமாகிய கையைத்தடவ அது வளர்ந்துவிட்டது. மகம்மதியத் தலைவன் அளவுகடந்த வாச்சரியமடைந்து அவரது ஆசீர்வாதம் பெற்றுப் போயினன். இவ்விர்த்தாந்தம் சதாசிவேந்திரஸ்துதியில் கூறப்பட்டிருக்கின்றது.

சதாசிவப் பிரஹ்மம் கோயில்களுக்குப் போவதுமுண்டு; மூர்த்தியைநோக்கி அர்ச்சனு மந்திரங்களை யுச்சரிப்பது முண்டு. அக்கால் ஒவ்வொரு மந்திரத்திற்கும் ஒவ்வொரு புஷ்பம் மூர்த்தியின்சிரசின் மீது அவாந்தரமாய் வீழ்வதுண்டாம்.

சதாசிவப் பிரஹ்மேந்திர ரியற்றிய அற்புதங்கள் பலவுள. அவற்றில் சில இங்குக் கூறப்பட்டன. இவற்றை நம்புவது அசாத்தியமாயினும் அவற்றை ஜனங்கள் மறந்து விடுவதில்லை. அவை கர்ண பரம்பரையாய் வந்து கொண்டிருக்கின்றன.

All rights reserved.

நீதி சதகம்.

திக்குக் காலமென்னு மிவற்ருல் அனவச் சின்ன மாயும், அநந்தமாயும், சைதன்ய மாத்திர ஸ்வரூபமாயும், தன்னுடைய அநுபவத்தையே பிரமாணமாக வுடையதாயும், சாந்தமாயுமுள்ள தேஜஸ்ஸுக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன். (அநவச்சின்னம் - வரையப்படாமை; அநந்தம் - முடிவின்மை).

மூர்க்கபத்ததி.

1. தெரிந்தவர்கள் அஸூயை யுள்ளவர்களாக இருக்கிறனர்; பிரபுக்கள் கர்வத்தை யடைந்திருக்கின்றனர்; ஏனையோர் அஞ்ஞானிகளாக இருக்கின்றனர். ஆதலின், எனக்குத் தெரிந்த ஸுபாஷிதம் (நல்வார்த்தை) என் சரீத்திலேயே ஜீர்ணமாகிவிட்டது.

அக்ஞன் (அஞ்ஞானி) ஸுகமாய் ஆராதிக்கத் தக்கவன்; விசேஷ அக்ஞன் மிகவெளிதாக ஆராதிக்கத்தக்கவன். சிறிது ஞானமடைந்ததைக் கொண்டு தன்னைப் பண்டிதனுக எண்ணிக் கொண்ட புருஷனைப் பிரம்ஹதேவனும் ரஞ்சிப்பித்தல் முடியாது.

2. முதலை வாயிலுள்ள கூர்மையான தத்துப் பல்லின் மத்தியிலிருந்தும் இரத்னத்தை எடுத்தல் முடியும்; பேரலைகளால் அலைந்துகொண் டிருக்குஞ் சமுத்திரத்தையுந் தாண்டுதல் முடியும்; கோபமுடைய ஸர்ப்பத்தையும் புஷ்பம்போல் சிரசில் தரித்துக்கொள்ளல் முடியும்; ஆனுல், துராக்ரஹத்தை யடைந்துள்ள மூர்க்கஜனங்களின் சித்தத்தை யாராதித்தல் முடியாது.

3. மணலை யந்திரத்திலிட்டரைத்து, அதினின்றும் எண்ணெய் எடுக்கலாம்; தாஹமுடைய புருஷன் கானனீரைப் பானம் பண்ணலாம்; தேச ஸஞ்சாரஞ் செய்து ஒருகால் முயற்கொம்மையு மடையலாம்; ஆனால் துராக்ரஹத்தை யடைந்த மூடர்களின் சித்தத்தை ஆராதித்தல் முடியாது.

4. எவன் அமிருதத்தைப் பெருகவிடுகிற ஹிதவார்த்தைகளால் மூடர்களைப் பலாத்காரத்தினால் திருப்தி பண்ணிவைக்க வேண்டு மென்று விரும்புகின்றானோ அவன் மதம்பிடித்த யானையைஇளந்தாமரைத் தண்டின் நூல்களால் கட்ட முயன்றவனாவன்; வாகைப்பூவின் நுனியினால் வைர ரத்தினத்தைப் பிளக்க முயன்றவனாவன்; மதுபிந்துவி (தேன்துளியி) னால் உப்புச் சமுத்திரத்தை மதுரமாகச் செய்ய விரும்பியவனாவன்.

5. மிகவும் ஹிதத்தைச் செய்வதும், அக்ஞதைக்கு (அஞ்ஞானிக்கு) மறைப்பைச்செய்வதும், விசேஷமாகச்சர்வக்ஞருடைய ஸபையில் அக்ஞதைக்கு மறைப்பைச் செய்வதும், ஸ்வாதீனமாயிருப்பதுமான மௌனமானது பிரம்ஹாவினால் நிர்மாணஞ்செய்யப்பட்டது. அது மூடர்களுக்குப் பூஷணமாக இருக்கிறது.

6. கிஞ்சிக்ஞனா (சிற்றறிவுடையவனா) யிருக்கிற நான் எப்பொழுது கஜம்போல் மதாந்தனாய்விட்டேனோ, அப்பொழுது ஸர்வக்ஞனாக இருக்கிறேனென்று எனது மனம் கர்வத்தை யடைந்தது. எப்பொழுது வித்வத் ஜனங்களிடத்திருந்து சிறிது சிறிதாகத் தத்துவங்கள் அறியப்பட்டனவோ அப்பொழுது நான்மூடனென்றறிந்தேன்; அதனால் என்னிடத்துள்ள கர்வம் ஜ்வரம்போலொழிந்தது.

7. (மூர்க்கன் மிகவுந் தாழ்வுடையனென்பதைத் திருஷ்டாந்தவாயிலாக விவரிக்கிறார்).

விஷ்ணுபுரம் - இராமச்சந்திர சாஸ்திரி.

போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.
மோகத்தை வென்றவர் முனிவா ராவர்.
உத்தம ரென்பவர் உலகியல் கடந்தார்.
ஈசுர பக்தி யெவர்க்கும் நன்று.
தெய்வ நிந்தனை தீமையைப் பயக்கும்.
சாதுக்கள் சேவை சதானந்தந் தரும்.

All rights reserved.

விசார சூடாமணி.

தீயவையெனக் கொள்ளும் விஷயங்களில் ஒவ்வொரு நன்மையான அம்சமிருத்தலேயன்றிப் பொய்யெனக்கருதும் விஷயங்களிலும் எப்போதும் ஒரு மெய்யான அம்சம் இருத்தலை நாம் அடிக்கடி மறந்து விடுகிறோம். அநேகர் பொய்ம்மையிலும் சாதாரணமாக மெய்ம்மையிருக்கலாமென்று பொதுவாக அங்கீகரிப்பினும், சிலர் மாத்திரமே தாங்கள் பிறர் அபிப்பிராயங்களைப்பற்றி இது சரி அல்லது இது தப்பு என்று தீர்மானிக்கும்போது தங்கள் கருத்தில் இவ்விஷயத்தை வைத்துத் தீர்ப்பிடுகின்றனர். உண்மைக்கு முற்றிலும் மாறாயிருப்பதாய் ரூபிக்கப்படும் ஒரு கொள்கை கோபத்தோடாவது அல்லது வெறுப்போடாவது தள்ளப்படுகிறது. இத்தகைய நம்பிக்கையைத் திரஸ்கரிக்கும் கோபாவேசத்தில் சற்று நிதானித்துஎன்னகாரணத்தினால்ஜனங்கள் இக்கொள்கையை மெய்யெனக்கொண்டனர் என்று ஒருவரேனும் விசாரித்தறிவதில்லை. என்றாலும், ஏதோ ஒரு காரணம் இருந்தே தீரவேண்டுமன்றோ? இக்காரணம் யாதெனின், தத்தம் அநுபவங்களுள் சிலவற்றிற்கு இக்கொள்கை பொருந்தியிருப்பதே என்று யூகிக்கப் போதுமான நியாயமுளது. இப்பொருத்தம் பெருமிதமில்லாததாயும், மிக அற்பமாயும், தெளிவோடு கண்டுபிடிக்கக்கூடாததாயு மிருக்கலாம். இருந்தாலும், பொருத்தம் பொருத்தமே. கிஞ்சித்தேனும் நம்பத்தகாத ஒரு சமாச்சாரமும் ஏறக்குறைய எவ்விடத்தும் எக்காலத்தும் உண்மையாகவே நடந்த ஒரு சங்கதியை அநுசரித்துள்ளதாகவே விசாரணையில்புலப்படும். உண்மையாக அவ்விஷயம் நடந்தில்லாவிடின் முற்றும் மௌடீகமாயும் அவநம்பிக்கைக்கிடமாயுமுள்ள இம்மாறுபாடான கொள்கை வெளிவந்தேயிராது. ஜனசமூகத்தின் வதந்திமூலமாக நமக்கு வரும் உண்மைக்கு மாறாயிருப்பதும் அல்லது உண்மையை அதிகப்படுத்திக் காட்டுவதுமாயுள்ள விஷயங்கள் யாவும் உண்மையைப்போல் இல்லாவிடினும் உண்மையான ஒரு சங்கதியில்லாவிடின், இவை முதலிய இதர விஷயங்கள் யாவும் இருந்திருக்கமாட்டா. பொதுவாக மானிடக்கொள்கைகள் யாவு மிப்படியே. முற்றிலுந் தப்பிதமாகக் காணப்படினும் அவை ஆதியில் அல்லது சிலவேளை இப்போதும் ஏதோ சிறுபாகம் உண்மையை உள்ளீடா

கக் கொண்டிருந்தன; அல்லது கொண்டிருக்கின்றன வென்பது யூகித்துணரத்தக்க விஷயமே.

இவ்விஷயத்தைப்பற்றித் திட்டமான அபிப்பிராயங்கள் நமக்குக்கிடைப்பின், பெரிதும் பயன்படும். ஆயினும், தற்கால அபிப்பிராயங்களைப்பற்றி ஒருவாறாகப் பொதுவகையால் நாம் தெரிந்துகொள்வது அத்தியாவசியகம்; ஏனெனின், அவைகளை அதிகமாக உயர்த்தாமலுந் தாழ்த்தாமலும் அவைகளுக்கு எந்த அளவு மதிப்பைக் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்க நாம் பாத்திரர்களாவோம். வாதத்திற்குட்படும் விஷயங்களைப் பற்றிச் சரியான தீர்ப்பிடுவதற்கு அத்தியாவசியகமாய் வேண்டப்படுவது யாதெனின், வாதங்களைக்கேட்டுக் கொண்டிருக்கும் போதாவது அல்லது நாமே வாதஞ்செய்யும் போதாவது நாம் கொண்டிருக்கும் நடுநிலைமையேயாம். சரியான நடுநிலைமையை நாம் வகித்துக்கொள்ளச்சாதாரணமானிடக்கொள்கைகள் எவ்வளவுஉண்மையாயும் எவ்வளவு பொய்யாயு மிருக்கின்றன என்பதை நாம்தெரிந்துகொள்வது அத்தியாவசியகமாம். ஒருபக்கம் ''எல்லோருஞ்சொல்வது உண்மையாகத்தானிருக்கவேண்டும்'' அல்லது ''பிரஜாவாக்கு ஈசுவரவாக்கு'' என்று எந்த அபிப்பிராயத்தினால் கூறப்படுகிறதோ அந்த அபிப்பிராயத்தின் காரணமாகத் தொன்றுதொட்டுப் பழக்கத்தின் மூலமாகவரும் விஷயங்களை விசாரணையின்றி அங்கீகரிக்குந் தன்மையை நீக்கியிருத்தல்வேண்டும். மற்றொருபக்கத்தில் முற்காலங்களில் வெகுபேர் தப்பிதமான கொள்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்று நமக்குத் தெரிந்தபோதிலும், அந்த வெகுபேரும் முற்றிலும் தப்பிதமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களல்லரென்பதை நாம் மறந்து விடுதல்கூடாது. இத்தகைய மனோநிலைமையோடுங் கூடியிருந்து விசாரஞ்செய்வது உசிதமாகும்.

ஆகையால், நாம் மேற்கூறிய தப்புகட் குட்படாதபடி பொதுவாக அபிப்பிராயங்களைப் பரீட்சைசெய்து அவற்றைமதிப்பிடல் வேண்டும். இதற்காக அபிப்பிராயங்களுக்கும் உண்மைகளுக்குமுள்ள சம்பந்தம் யாது என்பதை விசாரிப்பாம். இதன் பொருட்டு எக்காலங்களிலும் எத்தேசத்தாருள்ளும் பற்பல விதமாகப் பரவிவந்திருக்கும் ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டு விசாரணை செய்வாம். (தொடரும்).

சந்தோஷம்.

அபேத ஞானத்தின் பயன்.

"சமயகோடிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்று ஸ்ரீதாயுமானவர் கூறியபடி மதவாதிகளுள் பெரும்பான்மையோர் பிர்மா, விஷ்ணு, உருத்திராதி முப்பத்து முக்கோடி தேவர்களுள் திரிமூர்த்திகள் சிரேஷ்டர்களென்றும், அம் மூர்த்திகளினும் நாராயணன்தான் முக்கியனென்று சிலரும், உருத்திரன்தான் சிரேஷ்டனென்று சிலரும், கணபதி, சக்தி, சூரியன்தான் சிரேஷ்டர்களென்று சிற்சிலரும் ஒருவருக்கொருவர் எதிர்வழக்கிட்டுக் கலகஞ் செய்கிறார்கள். அந்தோ! இஃதென்ன மதிஹீனம்! ஒருகுடத்திற்குக் கடம், கும்பம், கலசம் என்பவை எப்படி பரியாயநாமமாமோ அப்படியே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், நாராயணன், இராமன், கிருஷ்ணன், சிவன், சுயம்பு, விநாயகன், ஸ்கந்தன், விராட், விபு, தேவன் இவை முதலிய நாமங்களும் ஸர்வஞ்ஞத்துவ, நித்தியத்துவ, நிஸ்ஸங்கத்துவ, நிர்க்குணத்துவ, வியாபகத்துவ, அகண்டத்துவாதி அனந்த கல்யாண குணங்களை யுடைய பரப்பிரம்மத்தின் பரியாய நாமங்களேயா மென்று அப்பதங்களின் அந்தரார்த்தத்தைக் கவனிக்கின், நன்கு புலப்படும்.

பிரம்மா: "தேசதः காலதः வஸ்துதः அபரிச் சின்னம் யத் வஸ்து தத் பிரம்மேதி பாஷ்யம்" எது தேசத்தாலும், காலத்தாலும், வஸ்துவாலும் பரிச்சேதப் படாததோ [என்றால், மிகவும் விஸ்தாரமானதாய்ப் பஞ்சபூதங்களோடும், அவற்றின் காரியங்களோடுங் கூடிய ஜகத்தில் ஸர்வ வ்யாபகத்துவம் அடைந்ததால் தேசத்தாலும், ஆதியந்த ரகிதமாயும் நித்தியமாயு மிருப்பதால் (பூத பவிஷ்யத் வர்த்தமான) காலத்தாலும், கடமானது எப்படி மண்ணினும் வேறு அல்லவோ அப்படியே பரப்பிரம்மத்தின் காரியவடிவ உலகம் ஸர்வமும் தத்ஸ்வ ரூபமாயிருத்தலால் வஸ்துவாலும் வரையறுக்கப்படாததோ] அதுவே "பிரம்மா" என்பதன் பதப் பொருளாம்.

விஷ்ணு: "விச்வம், வேஷ்டி வியாப்நோதீதி விஷ்ணுः "இப்பிரபஞ்சத்தில் உள்ளும் புறமும் வியாபகமான பரிபூர்ண வஸ்துவே "விஷ்ணு" வென்பதன் அர்த்தமாம்.

உருத்திரன்: "ருக், ஸாம்ஸாரிக துக்க: திராவ யதி,நாசயதீதி ருத்திர:" ஸம்ஸாரமென்னும் சுக துக்கங்களை நாசஞ் செய்பவன் உருத்திரன்.

நாராயணன்: "நாரம், விஞ்ஞானம்;ததயநமாச்ரயோயஸ்யஸஃ நாராயண:" விஞ்ஞானத்திற்கு ஆசிரயமானவன் நாராயணன் என்பதன் பொருளாம்.

இராமன்: "ரம தீதிராமஃ" யோகிகளுடைய இருதயத்தில் பிரகாசித்துக்கொண் டிருப்பவன்; என்ருல் தத்துவமஸி என்னும் மகா உபதேச வாக்கிய லக்ஷியார்த்தஸ்வரூபமாய் இம்மகா வாக்கியத்திறுண்டாகும் ஆத்ம, பிரம்ம, ஐக்கிய அநுஸந்தானமுள்ள யோகிகள் ஆனந்திக்கும் நித்தியாநந்த, சின்மய, நிஷ்கள அத்விதீயஸ்வரூபமான பரமாத்மா என்பது இராம சப்தத்தின் பொருளாம்.

கிருஷ்ணன்: "ஸர்வம் கரோதீதி கிருஷ்ண:" இச்சகத்சிருஷ்டிக்கு ஆதிகாரணனுய்ச் சிருஷ்டி,ஸ்திதி, லயங்களைச்செய்துவரும் நித்தியனென்பது கிருஷ்ண பதத்தின் அர்த்தமாம்.

சிவன்: "சாம்யதி பரமாநந்த ரூபத் வாந்நிர் விகாரோபவதீதி சிவ: "பரமாநந்த ஸ்வரூபமாய் நிர்விகாரமா யிருப்பவனென்பது சிவபதத்தின் பொருளாம்.

சுயம்பு: "ஸ்வயம்புரேவ ஸ்வாயம்பு:" என்ற சப்தோத்பத்திக் கிணங்கத் தனக்கொரு காரண மின்றித் தானய் விளங்குபவனென்பது பொருளாம்.

விநாயகன்: "விகதோ நாயக: ப்ரபுர்யஸ்ய, ஸ்வதந்த்ரத்துவாத், விநாயக:" தானே சுதந்தர ஞதலினல் தனக்கொரு நாயகனில்லாதவன் விநாயகன்.

ஸ்கந்தன்: "அந்தர சத்ரூன் சோஷயதீதி ஸ்கந்த:" காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் என்னும் ஆந்தர சத்துருக்களை நாசம்செய்பவன்; என்ருல் அவற்ருல் வெல்லப்படாதவன் என்பது பொருள்.

விபு: "விசேஷேண பவதீதி விபு:"உலகத்தில் சிருஷ்டி ஸ்திதி லயங்களுக் குரித்தான ஸகல பிராணிகளுக்கும் ஸகல வஸ்துக்களுக்கும் அதிஷ்டானமா யிருப்பது விபு.

தேவன்: "தேவேன ப்ரகாசேன தீவ்யதீதி தேவ:" ஜ்யோதி ஸ்வரூபமாய்ப் பிரகாசிப்பவன் தேவன்.

விராட்: "விசேஷேண ராஜதீதி விராட்" மிக்க பிரகாசத்தை யுடையவ னென்பது விராட் பதத்தின் பொருளாம்.

இங்ஙனம் மேற்சொல்லிய சப்தங்களின் அந்தரார்த்தத்தைக் கவனிக்கின், அவை கேவல சப்த பேதமே யன்றி வஸ்து பேதம் கிஞ்சித்தும் இல்லை யென்பது செவ்வனே விளங்குகிற தல்லவா? ஆகவே, மதவாதிகள், மத அத்தியாசங்கள் யாதொன்று மில்லாமல் "நாராயணன் நித்தியன், அவனே சிவன், அவனே பிரம்மா" என்று மகா நாராயணோபநிஷத்திலும் "உருத்திரனே பிரம்மா, அவனே விஷ்ணு, அவனே விநாயகன், அவனே ஸ்கந்தன்" என்று அதர்வசிரோபநிஷத்திலும், கூறியபடி "ஏகமேவாத்விதீயம்" இரண்டாவ தற்ற வஸ்து ஒன்றே என்று அறிந்து, எப்படி கோதாவரி கிருஷ்ணா கங்கைமுதலிய நதிகள் வெவ்வேறு நாமங்களை யடைந்து சமுத்திர சங்கமத்தின்பிறகு அவற்றின் நாமங்கள் திரஸ்கரிக்கப் படுகின்றனவோ அப்படியே பிரம்மா, விஷ்ணு, உருத்திராதி நாமங்களின் பேதமானது சமரசஞானத்தால் திரஸ்கரிக்கப்பட்டுப் போகின்றதென்று துணிந்து, ஸர்வமும் சச்சிதாநந்த ஸ்வரூபமே என்று குருஸந்நிதியில் சுருதி, யுக்தி, அநுபவங்களினு லறிந்து, நாமரூபபேத மொழிந்து, சத்தானது பரப்பிரம்மமே என்று கலங்காதிருப்பதே அபேதஞானத்தின்பயனும். இந்நிலை மானுடப்பிறப்புக்கு இன்றியமையாததாம்.

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுரன்பேட்டை, சென்னை.

பகவத்கீதையைப் படிப்பது நன்று.
திருவா சகப்பொருள் தெவிட்டா வமிர்தம்.
குருபாத சேவை குறையெலா மகற்றும்.
நடராஜ னருளை நாடின் நலனுறும்.
ஒவ்வொரு மதத்திலு முண்மை யுண்டு.
மனமாண் டவர்க்கே வாய்க்கும் பரகதி.
போலி வேடம் பொல்லாங் கெலாந்தரும்.
சாந்த நிலையைச் சார்வது நன்று.

யாக்கை நிலையாமை.

"அரிது அரிது மானிட ராத லரிது" என ஔவையாரும், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிதுகாண்" எனத் தாயுமான சுவாமிகளும், அருளியபடி மக்கள், தேவர், நரகர், மிருகம், புள், ஊர்வன, நீர்வாழ்வன என்னும் எழுவகைப் பிறப்புக்களுள் நமக்கு இறைவன் அருளிய மக்கட்பிறப்பே சிறந்ததெனவும், புண்ணிய மேலீட்டினுல் கிடைக்கக்கூடியதெனவு மறிதற்பாலது. இம்மக்கட் பிறப்பை யடைகின்ற அருமையை யாராயுங்காலத்து, அது சமுத்திரத்தைக் கரங்களினுலே நீந்திக் கரையேறுதல் போலப் புலப்படுகின்றது. இத்தன்மை வாய்ந்த மனிதப் பிறப்புக் கிடைத்தது உயிர்க்குயிராகியபரம்பொருளைத் திரிகரண சுத்தியோடு (மனோவாக்குக் காயங்களினுலே) வழிபட்டுச் சாதுக்களை அடுத்து அவர்களுக்குச் சிச்ருஷை முதலியவைகளைச் செய்து அழிவில்லாத முத்தி யின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம்.

இவ்வரிய சரீரத்தின் விருத்தாந்தத்தை யோசிக்குமிடத்துச், சரீரம் கருப்பையில் அழியினு மழியும், பத்துமாதத்தில் பிறந்தவுடன் அழியினு மழியும், பிறந்த பின் சிலகாலமிருந்து பாலாவத்தையில் அழியினு மழியும், தருணுவத்தையி லழியினுமழியும், விருத்தாவத்தையிலழியினுமழியும். எப்படியும் இச்சரீரம்நிலையின்றி அழிவது சத்தியமே. அழியுங்கால மாத்திரம் நமக்குத்தெரியாது. அத்தகைய மனிதப்பிறப்பு நமக்குக்கிடைத்திருக்கும்போதே அதைக்கருவியாகக்கொண்டு அதனுலெய்த வேண்டிய பயனைப் பெற முயலாமல் வாணுள் வீணுளாகப் "பரமேது வினைசெயும் பயனேது பதியேது பசுவேது பாசமேது பத்தியே தடைகின்ற முத்தியே தருளேது பாவபுண் ணியங்க ளேது, வரமேது தவமேது விரதமே தொன்றுமில்லை மனம்விரும் புணவுண்டுநல் வத்திர மணிந்துமட மாதர்தமை நாடிநறு மலர்சூடி விளையாடிமேற், கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு கலந்து மகிழ்கின்றசுகமே கண்கண்ட பலனெனுங்" கயவரோ டிணங்கிக் கழிப்பது மிகவும் பரிதபிக்கத் தக்கதன்றே! "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" எனவும் "இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ வேது

வருமோ" எனவும் பெரியருரைத்திருக்கும்வண்ணம் மச்சத்தைப் பிடிக்கு மீன்கொத்திப் புள்ளைப்போலக் காலனாகிய செம்படவன் மனிதர்களாகிய மீன்களைக் கொண்டு போவதற்குச் சித்தமாயிருக்கின்றானாகையால் "ஒவ்வொரு நாளு முயிரின் பகுதியே" எனவும், "சென்றநா ளெல்லாம் சிறுவிரல்வைத் தெண்ணலாம், நின்ற நாள் யார்க்கு முணர்வரிது" எனவும், பெரியோர்கள் கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாளைக்கு நாளைக் கென்னாது இப்போதைக்கே சைவசமயாசாரிகளுள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள்" நிலைபெறுமா றெண்ணுதியே நெஞ்சே நீவா நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப், புலர்வதன்முன் னலகிட்டு மெழுகுமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித், தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச் சங்கரா சயபோற்றி போற்றி யென்றும், அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதியென்று மாரூரா வென்றென்றே யலறுநில்லே" என்றருளியபடி சிரத்தினால் நம்மிறைவனை வணங்கியும், கண்களாற் றரிசித்தும் செவிகளால் அவனது திருப்புகழைச் சிரவணஞ் செய்தும், நாவால் அவனைப் பாடியும், கைகளால் சிரமீது கூப்பித் தொழுதும், கால்களால் அப்பெருமானது திருக்கோயில்களை வலம் வந்தும், மனதில் சதா தியானித்தும், சாதுக்களை அடுத்தும், திருவருளாகிய பேரின்பம் பெறுதற்கு முயலுவோமாக. ஸாத்விக, தாமஸ, ராஜஸ குணங்களில் உத்கிருஷ்டமான ஸாத்வீககுணம் வகித்தவரே ஸாதுக்க ளெனப்படுவர். இத்தகைய ஸாதுக்களின்ஸ்நேகமும்அவர்களுடைய ஸல்லாபமும் மிக இன்பந்தரத்தக்கனவாம். "நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்" என்றும், "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க, நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே-நல்லார், குணங்க ளுரைப்பதுவு நன்றேயவரோ, டிணங்கி யிருப்பதுவு நன்று" என்றுமுள்ள வாக்கியங்கள் கவனிக்கத்தக்கன. ஸாது சங்கத்தினால் மோக்ஷமும் கிடைக்குமென்பதை ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகள் பஜகோவிந்த ஸ்தோத்திரத்தில்—"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம், நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம், நிர்மோஹத்வே நிச்சலதத்வம், நிச்சலதத்வே ஜீவன்முக்திஹி" என்று கூறியிருக்கின்றனர். மஹாஞானியான பட்டினத்தடிகள் கூட" நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே, யல்லாது வேறு நிலையுள தோவக மும்

பொருளு,மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழி லுடம்பு, மெல்லாம் வெளிமயக்கே யிறைவா கச்சி யேகம்பனே" என்றும், "அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை, நித்தனை யம்மைச் சிவகாம சுந்தரி நேசனை யெங், கத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக் கண்கள், எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே" என்றும், தில்லைநடராஜ விக்கிரஹ சம்பந்தமாகப் பாடியிருக்கின்றாராகலின், இனியாவது நமக் கேற்பட்டிருக்குங் காலத்தில் நாம் குக்ஷிபாதை நிமித்தமாகச் செலவிடவேண்டிய காலம்போக எஞ்சியகாலத்தில் ஸர்வ வியாபகராயும் ஸர்வாத்ம சரண்ணியராயுமுள்ள ஈசுவரனைத் தியானித்தும், ஸாதுக்களுக்குப் பணிவிடை முதலியன செய்தும், இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, பெற்றோரைப் பேணல் முதலிய அருஞ்செயல்களைக் கைப்பற்றியும் நடப்போமானால் நமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் ஒழிவதோடு மோக்ஷமும் வெகு இலேசில் கிடைக்குமென்பது உண்மை.

க. ரா. சோக்கலிங்க முதலியார்,
காரியதரிசி, ஸ்ரீநடராஜ பக்தஜன சபை,
சூளை, சென்னை.

நூதன விடுகதை வினா.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்,

மண்டலத்தி லோர்பொருட்பே ராறெழுத்தில்
வயங்குபின்மூன் றெழுத்தகற்ற மகிழ்ச்சி யென்பார்
ரண்டெடன்பின் மூன்றெழுத்து மகற்ற வெண்மை
ரஞ்சிதநான் கொடுமூன்றால் மதன்பெண் டீராங்
கண்டதொரு வைந்துநான் குடன்மூன் றுஞ்சொல்
கடையிரண்டாற் சிற்பமொன்று வைந்தொன் றாலே
சண்டனெனச் சொல்லுவரிப் பொருள்தெரிந்து
தாரணியில் விடைபகர்வீர் தமிழ்வல் லோரே.

V-மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட்முனிசிபல் கௌன்சிலர்,
பழனிஸ்தலம்.

கற்புடைய மங்கையர்க்குக் கணவனே தெய்வம் என்ற விடுகதைவினா.

இரட்டையாசிரிய விருத்தம்.

பட்டணப் பெயரொன்று தேவர்கோன் பெயரொன்று
　　படிநாம மொன்று சிலைப்
பரியாய நாமமொன் றெழில்தலைவி பெயரொன்று
　　பார்வதியி னுமமொன்று
சிஷ்டர்துதி நதியொன்று பெருமையின் பெயரொன்று
　　திடசிங்க நாம மொன்று
தீர்வையின் பெயரொன்று மாமரப் பெயரொன்று
　　திகழ்பறவை நாம மொன்று
வட்டமிகு மரமொன்று ராகத்தி லொன்றுநீள்
　　வாரிதிப் பெயரி லொன்று
வளர்குகன் பெயரொன்று மகரமீன் பெயரொன்று
　　மாவழிப் பெயரி லொன்று
அஷ்டதிசை யெங்குமுள வுண்மையின் பெயரொன்று
　　அமலமிகு சத்தி யொன்று
அன்பர்துதி கும்பகோ ணப்பெயரி லொன்றிதனை
　　அவனிமிசை கூறு தற்கு,

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அக்கரங்கள் மூன்றெழுத்துக் கொண்ட பேராம்
　　அதினடுவி லுளவெழுத்தை மகிழ்ந்தெ டுத்து
மிக்கவரி சைக்கிரம மெழுதி நோக்க
　　மேதினியிற் கற்புடைய மங்கை யற்குத்
தக்கபடி கணவனே தெய்வம் என்று
　　சாற்று மிந்தப் பொருளதனை முற்றுந் தேர்ந்து
திக்கனைத்தும் புகழ்படைத்த கவிவல் லோரே
　　சிந்தைமகிழ் கூர்ந்துவிடை செப்பு வீரே.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட்முனிசிபல் கௌன்சிலர்,
பழநிஸ்தலம்.

சொற்களைப் பிள்ளைகளாற் குலத்துக்கீனம் என்ற விடுகதைவினா.

சிந்து

தான தனத்தான தனத்தான தனத்தான தனத்
தான தனத்தான தனத்தான

கண்ணிகள்

மாதத் துவசொருபப் பேரொன்று கடவுள் பேரொன்று
மங்கள சோதிட நூலிலொன்று
வேதம் நவில்பார் வதிபேரொன்று சிவன்பெய ரொன்று
மேன்மைக்ரீட தாரணப்பே ரொன்று
சாதன நீதிநூலா சிரியர்பெயர் தனி லொன்று
தாம செங்கரும்புப் பாற்பேரொன்று
பூதலம் புகழு மாலின் பெயரொன்று மரமொன்று
பூவாளி பெயரதனி லொன்று (தானத)
கும்பகோணப் பெயரொன்று வனுஷ்டான காலத்தைக்
குறித்துரைசெயும் பெயரொன்று
அம்புவியெல்லாம் புகழுந்தென்னவர் கோன்றனிலொன்று
ஆரணக் கொடியின் பெயரொன்று
உம்பர்சொல் வேதாக் கிளிபிலொன்று மீந்திரியிலொன்று
ஓங்கிய முந்நூற் பெயரி லொன்று.

வைத்தியக் குறிப்பு

வச்சிர தந்தப் பொடி—சீமைச் சுண்ணும்பு வீசை 1, படிக்காரச்சுன்னம் வீசை $\frac{1}{4}$, கருவேலம் பட்டைத்தூள் வீசை $\frac{1}{8}$, ஏலம் பலம் 1, சன்ன லவங்கப்பட்டை பலம் 2, கிராம்பு பலம் $2\frac{1}{2}$, சோம்பு பலம் 3, சந்தன அத்தர் தோலா $\frac{1}{4}$, மேற்கண்ட சரக்குகளையெல்லாம் தூள்செய்து அதில் ஷை அத்தரைவிட்டுப் பிசறிப் பாணியில் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு தினந்தோறுந் தந்த சத்தி செய்துகொண்டுவர பல்-அசைதல் குத்தல்- கூசுதல்-எயிறு தடித்தல் - இரத்தம்- சீழ்வருதல் - பல்லிற் புழுக்குடைதல் முதலிய துர்க்குணங்களைப் போக்கும்; வாய்ப்புண்ணுறும்.

குறிப்பு—கால்வீசை படிகாரத்தை ஒரு மண்கலசத்திற்போட்டு அது நிறைய மிளகுதக்காளிச் சாற்றைவிட்டு ஷை கலயத்துக்கு மேலோடுமூடி வலுவாய்ச் சீலைமண் செய்து அதைப்புடம்போட்டெடுக்கப் படிகாரச் சுன்னமாம்.

உப்புப்பற்பம்—ஏழுகாய்ச்சல் வெடியுப்புப்பலம் 1, படிக்காரம்பலம் 1, இவைகளைக் கல்வத்திற்போட்டு-பிரண்டை சமூலமிடித்தெடுத்த சாறுவிட்டு 4-சாமம் அரைத்து வெல்லக்கட்டிபோல் சதுரக்கட்டிகளாகப் பிடித்துச் சுக்குப்போற் காயவைத்து அக்கட்டிகளுக்கு மறுபடியும் பிரண்டையிலையை அரைத்துக் கவசஞ்செய்து மேலுங் கீழும் ஓடுபோட்டுமூடி வலுவாகச் சீலைமண் செய்து முழப்புடத்திற் போட்டெடுக்கப் பற்பமாம். அதைப் பரணியில் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு உஷ்ணவாய்வுக்கு வெண்ணெய் நெய் அல்லது நீர்ச்சோற்றுத் தண்ணீரிலும், சீதவாயுகளுக்கு தேனிலும் 1 பணவிடைவைத்துக் காலை மாலை மூன்று நாள் ஆறுவேளை கொடுக்க வாயு ரோகந்தீரும். பத்தியம் ஸ்திரீ போகம் நீக்கவேண்டியது. வாய்வு பதார்த்தந் தள்ளுபடி.

மேகரணக்களிம்பு—சாதிலிங்கம், இரசகர்ப்பூரம், மிருதார் சிங்கி, வெள்ளைக்குங்கிலியம், காசுக்கட்டி, கடுக்காய், தானிக்காய், மாச்சக்காய், கடுக்காய்ப்பூ- இவ்வொன்பது சரக்குகளையும் இடையாக நிறுத்துக் கல்வத்திற்போட்டு நன்றாய்த் தூள்செய்து அதற்குத் தகுந்தபடி வெண்ணெய்போட்டு நான்கு சாமமரைத்து அதை வழித்தெடுத்து ஒரு பாத்திரத்தில் விடப்பட்ட தண்ணீரில் ஒரு நாள்முழுதும் ஊறப்போட்டுவைத்து அப்பால் எடுத்துப் பரணியில் பதனஞ்செய்து வைத்துக்கொண்டு உபயோகித்துவரச் சகலவித ரணங்களுமாறும்.

மேற்கண்ட பிரயோகங்களைச் செய்து பரிக்ஷித்துப்பார்த்த கனவான்கள் அது விஷயத்தில் தங்களுக்கிருக்கும் அபிப்பிராயங்களை இந்தப் பத்திரிகையின் வாயிலாகத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லேட்முனிசிபல் கௌன்சிலர்,
பழநிஸ்தலம்.

கிண்டர் கார்ட்டன்

என்னும்,

பாலபோதன முறை.

கிண்டர் கார்டன் என்னுஞ்சொற்றொடர் ஜர்மன் பாஷையி னது; கிண்டர் - கார்ட்டன் என்னு மிரண்டு பதங்களாலாகியது; கிண்டர்— பிள்ளைகள்; கார்ட்டன் தோட்டம் (பிள்ளைகள்தோட் டம்).

ஆகவே, இது பிள்ளைகளாகிய தோட்டம் என்றருத்தமுடைய தாகின்றது. உபாத்தியாயர் தம்மையொரு தோட்டக்காரனைப் போலும் தம்மிடங்கற்கும் பிள்ளைகளை (வகுப்பை)யொரு தோட் டமாகவும் ஒவ்வொரு பிள்ளையையும் ஒவ்வொரு விதமான செடி யைப்போலவும் பாவித்துத் தோட்டக்காரன் எப்படி ஒவ்வொரு விதமானசெடிக்கு ஒவ்வொரு விதமான முறையைப் பயிரிடுவதில் உபயோகிக்கின்றானோ அப்படியே உபாத்தியாயரும் ஒவ்வொரு விதமான பிள்ளைக்கும் ஒவ்வொருவிதமான முறையைப் போத னையில் உபயோகப்படுத்தினால் செடிகளைப்போல் பிள்ளைகளும் படிப்பில் விர்த்தி யடைவார்களென்பதற் கையமில்லை. இங்ஙனம் செய்பத் தோட்டக்காரன் செடிகளின் தாரதம்மியத்தை அறிய வேண்டும்; உபாத்தியாயர் பிள்ளைகளின் தாரதம்மியத்தை அறி யவேண்டும். செடிகளின் தாரதம்மியமாவது சிலசெடிகளுக்கு ஜலம் அதிகமாகவே வேண்டியிருக்கும். சிலவற்றிற்கு உஷ் ணம் அதிகமாய் வேண்டியிருக்கும். சிலவற்றிற்கு ஒருவித மான எருதேவை. மற்றவைகளுக்கு வேறுவிதமான எருதேவை. இப்படி பலவகைப்படும். ஒரு செடிக்கும் மற்றச்செடிக்கு முள்ள தாரதம்மியத்தை யறிந்து அவற்றைத் தகுந்த காலத்தில் தகுந்த நிலத்தில் (*Soil*) பயிராக்கி, அவற்றிற்குப் போதுமான ஜலம்பாய்ச்சி எருவைத்துச் சூரிய உஷ்ணமும் வெளிச்சமும் போதுமான அளவு படும்படி வைத்தல் தோட்டக்காரனுடைய கடமையாம்.

பிள்ளைகளின் தாரதம்மியமாவது: — சிலபிள்ளைகளுக்கு உற்றுப்பார்க்குஞ் சக்தி யுண்டு. சில பிள்ளைகளுக்குக் கதைகள் கேட்பதில் பிரியம். சில பிள்ளைகளுக்குக் கணிதம் செய்வதில் பிரி

யம். இப்படி பலவகைப்படும். ஒருபிள்ளைக்கும் மற்றப்பிள்ளைக்குமுள்ள வித்தியாசத்தையறிந்து அவர்களின் மனப்பயிற்சிக்கேற்றவாறு எந்தெந்தக்காலத்தில் எந்தெந்த விஷயங்களைச் சொல்லவேண்டுமோ அவற்றைத் தகுந்த முறைகளால் போதிப்பது உபாத்தியாயர் கடமையாம்.

இப்படி பிள்ளைகளின் மனோ தத்துவங்களை (சுபாவ உணர்ச்சிகளை) யறிந்து அவற்றிற்கிசையப் போதிக்கும் முறைக்குக் கிண்டர் கார்டன் அல்லது பாலபோதனைமுறை என்று பெயராம். இம்முறைப்படிபோதிக்கும் ஒவ்வொரு உபாத்தியாயரும் பிள்ளைகளின் மனோ தத்துவங்களை அறிவது இன்றியமையாதது.

அவையாவன:—

(1) சுறுசுறுப்பு. (Activity)

(2) விளையாடுவதில் இச்சை (Desire to play).

(3) நூதன விஷயங்களை யறிவதில் ஆவல் (Inquisitiveness).

(4) (a) அழகான வஸ்துக்களைப் பார்த்து சந்தோஷித்தல்.
(b) பலவர்ணப் பொருள்களில் ஆசை.
(c) இனியபாட்டில் உற்சாகம். } Æsthetic-power.

(5) பாவனை சக்தி (Imitation power)

(6) கூட்டமாயும் நேசமாயுமிருப்பதில் பிரீதி } Desire to be in association.

(1) சுறு சுறுப்பு—மனமானது ஒரு க்ஷணமேனும் வேலையற்றிருக்கும் இயல்புடைய தன்று. ஏதாகிலும் ஒரு விஷயத்தை நாடிக்கொண்டேயிருக்கும். இத்தன்மையைச் சிறுவர்களிடத்தில் மிகுதியாய்க் காணலாம். குழந்தைகள் எப்போதும் ஓடுவதும், குதிப்பதும், பாடசாலையில் பாடத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது தெருவில் ஏதாகிலும் ஒருவேடிக்கையோ அல்லது சந்தடியோ நடந்தால் பாடத்தைக் கவனியாது அங்கே கவனிப்பதும், சற்றுநேரம் உபாத்தியாயர் சும்மா விருந்தால் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சச்சரவு செய்வதும், இக்குணத்தின் தன்மைகளே. சிறுபிள்ளைகள் ஒருவிஷயத்தைப் பற்றி வெகுநேரம் கவனிப்பது கடினமாகையால் போதிக்கும் விஷயங்களை அப்போதைக் கப்போது மாற்றிக்கொண்டேயிருப்பது நலம். இயல்பாகவே அவர்களின் மனது சுறுசுறுப்பாயிருப்பதால் நம்விஷயங்களை அடிக்கடி மாற்றுதல் அத்தியாவசியகமாம்.

(2) விளையாடுவேதில் இச்சை: பிள்ளைகளுக்கு விளையாடுவதில் அதிக சந்தோஷமென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அவர்கள் விளையாடும்போது சந்தோஷத்தில் மூழ்கியிருக்கிறார்கள். பிள்ளைகள் சந்தோஷிக்கிறார்களென்பதை அவர்களின் முகமலர்ச்சியினாலும், சிரிப்பினாலும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். சிரிப்பினால் அவர்களின் மார்பு அகன்று மூச்சுப்பைகள் பலப்படும்; இரத்தம் செவ்வையாய்ப் பரவும். சிறுவர்களின் மனது சந்தோஷத்தினால் பூரிக்கப்படுகின்றது. சந்தோஷமானது சிறுவர்களின் தேகாரோக்கியத்திற்குத் தேவாமிருதம் போன்றது. ஆகையால் பிள்ளைகளுக்கு விளையாட்டு இன்றியமையாதது. அவர்களுக்குக் கற்பிக்கும் விஷயங்களும் விளையாட்டின் மூலமாகவே யிருத்தல் அத்தியாவசியகமாம். நம்தேசத்தில் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் போவதென்றால் அதிக வெறுப்பு. உபாத்தியாயரைக் காண்பதென்றால் அதிகபயம். ஏன்? உபாத்தியாயர்கள் பிள்ளைகளின் மனோதத்துவங்களுக்குத் தகுந்தபடி பாடங்களைப் போதிக்காமைபற்றி அவர்களைக் கண்டால் பயமும் பள்ளிக்கூடத்தில் வெறுப்பும் பிள்ளைகளுக்கு உண்டாகின்றன. பள்ளிக்கூடத்தை விளையாடுமிடமென்றே பிள்ளைகள் கருதவேண்டும். உபாத்தியாயர்களும் அவர்களைத் தங்களுடன் விளையாடுபவரென்றே நினைக்கவேண்டும். அப்போதுதான் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போவதில் விருப்பமும் உபாத்தியாயரிடத்தில் ஆசையும் ஏற்படும்.

(3) நூதன விஷயங்களை அறிவதில் ஆவல்: குழந்தைகளுக்கு இவ்வுலகத்திலிருக்கும் ஒவ்வொரு விஷயமும் புதுமையே. ஒரு சிறுகுழந்தையினிடத்தில் ஏதேனும் ஒருபொருளைக் கொடுத்தால் அது அதை வாயில் வைத்துக் கொள்வதையும் தரையின்மேல் அடிப்பதையும் நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அவர்கள் புதிய பொருளைக் கண்டபோதும், ஏதேனும் தெரியாத விஷயங்களைக் கேட்டபோதும் அவற்றை நன்றாய்த் தெரிந்து கொள்ளுமாறு பெற்றோர்களையும், மற்றோர்களையும் இஃதென்ன? ஏனிப்படி யிருக்கிறது? இப்படி யில்லாவிட்டாலென்ன? எனப் பலகேள்விகளைத் திருப்பித் திருப்பிக் கேட்பதும் கதைகளைச் சொல்லச் சொல்லித் தொந்தரவுசெய்வதும் வழக்கமல்லவா? இவ்வாறு அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்

லுவது பெற்றோர்க்கும் உபாத்தியாயருக்கும் மற்றவர்களுக்கும் கஷ்டமாய்த் தோன்றுவதால், அவர்கள் பிள்ளைகளை வைது அவர்களின் வாயை அடக்கிவிடுகிறார்கள். இப்படிச் செய்வது, அவர்கள், பிள்ளைகளை நோக்கி "உங்களுக்கு உலகத்தைப் பற்றியவிஷயங்கள் ஒன்றும் தெரியவேண்டியதில்லை; நீங்கள் முழு மூடராகத்தா னிருக்கவேண்டும்" என்று சொல்வது போலாகிறது. ஆகையால், இப்படிச் செய்யாது குழந்தைகள் கேட்கும் ஒவ்வொருகேள்விக்கும் பொறுமையாய்ப் பதிலுரைத்துப் பலவேடிக்கைக் கதைகளைச் சொல்லியும் அவர்களிடத்துள்ள ஆவலை விருத்தி செய்வது ஆவசியகமானது. தங்களால் தெரிந்து கொள்ளக் கூடாதவிஷயங்களைப் பிள்ளைகள் கேட்டால், அவ்விஷயங்கள் உங்களுக்கு விளங்கா வென்றும் நாளாவர்த்தியில் தெரிந்து கொள்ளலாமென்றும் சொல்லி அவர்களைத்திருப்தி செய்வது நலம்.

(4) (*a*) அழகான வஸ்துக்களைப் பார்த்துச் சந்தோஷித்தல்.

(*b*) பலவர்ணப் பொருள்களில் ஆசை.

(*c*) இனிய பாட்டில் உற்சாகம்.

அழகான வஸ்துக்களைக் காண்கிறபோதும் இனிய இசையைக் கேட்கிறபோதும் நல்ல வாஸனையை முகர்கிறபோதும் மனமானது சந்தோஷத்தை யடைவது அதற்கியல்பாம். சிறு குழந்தைகளுக்கும் இக்குணம் இருப்பதாகத் தெரிகிறது. குழந்தைகள் தொட்டிலில் கட்டியிருக்கும் பலவர்ணமான பொம்மைகளையும் கிளிகளையும் அழகான புஷ்பங்களையும் பார்க்கும் போதும், அவர்களைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டும் போதும் பாடும் பாட்டின் இனியவிசையைக் கேட்கும்போதும் பக்ஷிகளின் மதுரகானத்தைச் செவியுறும் போதும், சந்தோஷமாயிருக்கிறார்களல்லவா? இவையெல்லாம் மேற்சொல்லிய குணங்களின்தன்மைகளேயாம்.

(5) பாவனாசக்தி: நடை, புடை, பாவனைகளில், பிறரைப் போல் தாங்களும் நடக்கவேண்டுமென்கிற ஆசையாவரிடத்தும் இயல்பாயிருக்கும் குணமே யாயினும் சிறுவர்களிடத்து மிகுதியாகப் புலப்படும். சிறுவர்களிற் சிலர் ஒன்றாய்க்கூடி மரப்பலகைகளால் வீடுகட்டிக் களிமண்ணாற் பாத்திரங்களைச் செய்து

தின்பண்டங்களை வைத்துக்கொண்டு புருஷன் பெண்ஜாதி யென்றும், பெண்டுபிள்ளைக ளென்றும், உற்றுருறவினரென்றும் தங்களுட் பாவித்துச் சமையல் சாப்பாடு நித்திரை முதலிய வியவகாரங்களைச் செய்வதுபோல நடித்து விளையாடுவதும், மற்றுஞ்சிலர் உபாத்தியாயரென்றும் மாணுக்கர்களென்றும் பாவித்துக் கொண்டு பாடசாலைக் காரியங்களைச் செய்வதும், இச்சுபாவத்தின் இயல்பே. நாடகமாடுவதும், ஒருவர்பேசுவது போலப் பேசுதலும், பக்ஷிகள், மிருகங்கள் முதலியவற்றைப் போலப் சப்தித்தலும், சித்திரமெழுதுதலும் இக்குணத்தின் அறிகுறிகளேயாம்.

(6) கூட்டமாயும் நேசமாயும் இருப்பதில் பிரீதி: தன்னந்தனியே அழுது கொண்டிருக்கும் குழந்தையை நாலைந்து குழந்தைகளோடு சேர்த்துவிட்டால், அக்குழந்தை தன் அழுகையை நிறுத்தி முகமலர்ச்சிகொண்டு மிகவும் சந்தோஷமா யிருப்பதாகத்தெரிகிறது. அன்றியும் ஒவ்வொருசிறுவனும் தன்கூட்டாளிகளைவிட்டுத்தன்னந்தனியே விளையாடுகிறதில்லை. விளையாடப்போகும்போது எல்லோரையும் கும்பலாய்க் கூட்டிக்கொண்டு போவதை நாம் சாதாரணமாய்ப் பார்க்கிறோம். இதனுல் விளையாட்டினுலுண்டாகும் சந்தோஷத்தைத் தன்கூட்டாளிகள் எல்லோரும் அடையவேண்டுமென்கிற விசுவாசம் அவர்களிடத்தில் இருப்பதாகத் தெரிகிறதல்லவா? மேற்கூறிய பலகுணங்களேயன்றிப் புகழ்ச்சியில் இச்சையும், இகழ்ச்சியில் வெறுப்பும், தண்டனையில் பயமுமிருத்தல் சாதாரண குணங்களேயாம்.

(வரும்.)

(N.) சுப்பிரமணிய ஐயர்.
திருவேட்டேசுவரன் பேட்டை,
சென்னை.

உடற்பற் றெழிந்தா லுலகிய லொழியும்.
சித்த ஜயம்வரின் சிவனரு ளுண்டாம்.

பெண் கல்வி.

கல்வி என்பது அறிவு ஞானம் என்று பொருள்படும். கண், காது, செவி, மூக்கு, துவக்கு முதலிய இந்திரியங்களின் மூலமாய் உலகத்திலுள்ள விஷயங்களை அறிவதே ஞானமாம். ஆகையாற்றான், இவ்விந்திரியங்களுக்கு ஞானேந்திரியங்களென்று பேராம். ஆனால், இவ்விந்திரியங்களோடு மனமும் சேர்ந்தாற்றான் அவற்றால் வஸ்துக்கள் அறியப்படும். இப்படி பஞ்சேந்திரியங்களின் மூலமாய்ப் பிரத்தியக்ஷமாய் அறியக்கூடியவை சிலவே; ஆனால், பெரும்பான்மையன உவமான அநுமானப் பிரமாணங்களால்அறியக்கூடியவையாம். பிரத்தியக்ஷமல்லாதவஸ்துக்களைப்பற்றித் தெரிந்துகொள்ள அறிவுகூர்மையா யிருப்பது அத்தியாவசிகம். "எல்லாரு ஞானத் தெளிஞரே" என்று பெரியார் கூறியபடி ஒவ்வொரு ஜீவனும் அறிவுடையவனேயாம். ஆனால், அவ்வறிவு மிக்கமங்கலாயும் மறைபட்டு மிருக்கும். கல்வியால் அவ்வறிவு பிரகாசிக்கும். "கண்ணகத்து அஞ்சனம் போற்கல்வி" புதைத்தபொருளை அறிய அஞ்சனமாகியமை எப்படி உதவுகிறதோ அப்படியே மறைந்திருக்கும் அறிவு பிரகாசிக்கக் கல்வி சாதனமாகும். கல்வி என்றபதத்தின் பொருளை வேறுவிதமாகக் கவனிக்கின், தோண்டுதல் என்றும் பொருள்படும். கல்வி என்பது தொழிற்பெயர். கல் பகுதி; வி-தொழிற் பெயர்விகுதி. கல் என்ற பகுதி பலபொருள்படுவது; தோண்டு என்பது மொருபொருள். தோண்டுதல் - எதைத் தோண்டுதல்? அறிவை. இவ்வர்த்தத்திற் கிணங்கத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறும் அறிவு" என்று திருவாய் மலர்ந் திருக்கிறார். ஆகவே, அறிவு அல்லது ஞானத்திற்குச் சாதனமாயுள்ளது கல்வியே யாம். "கல்லா வொருவன் குலநலம் பேசுதல், நெல்லினுட் பிறந்த பதரா கும்மே" என்ற மூத்தோர் மொழிப்படி மானிடராய்ப் பிறந்தஒவ்வொருவருக்கும் கல்விஅத்தியாவசியமே. "கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லா தவர்" "மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப் பிறந்துங், கற்றா ரனைத்திலர் பாடு" "விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்"-"அறிவுடையா ரெல்லா முடை

யார் அறிவிலா, ரென்னுடைய ரேனு மிலர்" என்றுள்ள தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனரின் பொய்யா மொழிப்படி கல்வி யானது குலத்தினும், ஆசாரத்தினும்,செல்வத்தினும், மேம்பட்ட தென்பது செவ்வனே விளங்குகின்ற தல்லவா? "மன்னரு மாச றக் கற்றோருஞ் சீர்தூக்கின், மன்னரிற் கற்றோர் சிறப்புடையர்" என்று கூறுகின்றவாறு சர்வ சுதந்திரமும் அதிகாரமும் உடைய அரசரும் கற்றோர்க்கு நிகரல்லரென்றால், கல்வியின் பெருமை எவ் வளவோ? இவ்வளவு பெருமை வாய்ந்த கல்விக்குச்சாதனங்களான ஞானேந்திரியங்களைந்தும் மனதும் ஒவ்வொரு மானுடப்பிறப்பி னுலும் பெறப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் பெறப்பட்டமையி ஞற்றான் "எல்லாரு ஞானத் தெளிஞரே" என்று கூறச்சாத்தி மாயிற்று. இவ்விஷயத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடு சிறிது மின்று. தம் மகத்துள்ள அறிவை விருத்தி செய்யச் சாத னமாயுள்ள கல்வி யாவருக்கு முரியது. ஆண்பால் பெண் பால் என்னும் வேற்றுமை யின்றி ஞானேந்திரியங்களும் மன தும் மனிதராற் பெறப்பட்டமையான், இஃது ஈசுவரசம்மதமாம். இதற்குமாறாக, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த் தங்கட் ஹேதுவான கல்வி பெண்களுக்கு அநாவசியமென்றுகூறு வது பொருந்தாது. இன்னும் பற்பல விதமாக அவிவேகத்தினல் நிகழும் எண்ணங்க ளெல்லாம் ஈசுவர துரோகத்திற்குப்பாத்திர முடையனவேயாம். இவ்வெண்ணங்கள் யாவரிடத்தில் நிகழுகின்ற னவோ அவர்கள் மேற்கூறிய காரணத்தினல் நாஸ்திகராவாரென்ப தற்கு ஐயமில்லை. இச்சமத்துவநிலை நமது தேசத்தில் தொன்று தொட்டு வழங்கி வந்ததென்பதும், ஸ்ரீகள் மிக்க அறிவுடையவர் களாய்த் தங்கள் தங்கள் பதிகள் செய்யும் சகல தேசோபகாரங் களினும் சகாயிகளாய்த் தேசக்ஷேமத்திற்குப் பாடுபட் டிருந்தா ரென்பதும், நமது புராண இதிகாசங்களின் வாயிலாக நாம் செவ் வனே அறிகிறோமல்லவா? மகா பண்டித சிகாமணியாகிய யாக் ஞவல்கியர் தம் மனைவி மைத்திரேயிக்கு ஞானக்கண் உதய மாமாறு சர்வசாக்ஷியாய் விளங்கும் ஆத்ம ஸ்வரூபத்தை உப தேசித்தா ரென்று உபநிடதங்களில் சொல்லப்பட் டிருக்கின் றது. இதுவேயுமன்றி, ஒரு காலத்தில் ஜனகரானவர், ஒருயாக த்தைப் பூர்த்திசெய்யுஞ் சந்தர்ப்பத்தில் அந்தணருக்குத் தானம் செய்யக் கருதி நல்ல பசுக்களைச் சபைக்குக் கொண்டுவந்து அப்

பசுக்களின் கொம்புகளில் பொன் நாணயங்களை முடிந்து எவருக்குச் சாஸ்திரங்களில் சிறந்த பாண்டித்தியமுண்டோ அவர்கள் இப்பசுக்களை அங்கீகரிக்கலாமென்று கூறினர். அப்போது அவ் வந்தணர் கூட்டத்தில் எவரும் முன்வருவோரின்றிச் சித்திரப்பாவைபோல் செயலற்று நின்றனர். பிறகு "கர்கி" என்ற ஒரு ஸ்திரீ பண்டித சிகாமணி மிக்க தைரியத்துடன் அங்குள்ள யாக்ஞவல்கியர் முதலிய அந்தணருடன் வாக்குவாதஞ் செய்து சிறந்த கீர்த்திபெற்றாரென்றும் தெரிகின்றது. இவ்வாற்றால் பெண்பாலாரும் விசேஷக் கல்விபயிற்சி பெற்று அதிக உயர்ந்த நிலையிலிருந்து தக்கமரியாதைக் குரியவர்களா யிருந்தாரென்றும் தக்கபிரமாணங்களின் மூலமாகத் தெரிகிறது. இவ்விதம் இருபாலாரும் கல்வி விஷயத்தில் சமத்துவ நிலையில் இருந்தும், மகம்மதிய அரசாட்சி இந்தியாவிற்கு வரவே அவர்கள் ஆசாரத்தைச் சிறிது அநுசரிக்கத் தொடங்கி இந்துக்கள் தங்கள் பெண்களை ஏறக்குறைய அந்தரங்க வாசிகளாகச் செய்தார்கள். இவ்வாறு செய்வது அத்தியாவசியகமாகத் தோன்றியதால், ஸ்திரீகளைப் பகிரங்கமாய் வெளியே அனுப்பவும், படிப்பிக்கவும் கூடாத நிலைமை இந்தியாவுக்கு ஏற்பட்டது. இந்நிலையில்தான் நம் தேசத்தில் "பெண் கல்வி" க்ஷீணதசையை யடைந்தது. இத்தசையை நாம் பலநாள் அடைந்திருந்தமைக்குக்காரணம் பல ஜாதியார் நம்தேசத்தின் மீது படையெடுத்து வந்ததும், அதனால் தேசம் அமைதி யில்லாமற் போனதுமேயாம். ஆனால், இப்போது ஆங்கிலேய அரசாட்சியில், "சொந்தமா முடலாவி பொருளெலாங் கைசோர்ந்து தூரதே சங்க ளோட, வந்ததோர் கலகத்தால் ஐதரொடு டிப்புதான் மலிந்தவிடர் தீர்ந்ததிந்நாள்" என்றபடி ஐதர் டிப்பு இவர்கள் காலத்தில் நேர்ந்த அளவிறந்த இடர்கள் பலவும் நீங்கின. தந்தை தாய், மக்கள் எல்லோரும் கவலையின்றி யோரிடத்திற் சுகமாயிருக்கும் வாழ்க்கையைப் பெற்ற ஆங்கிலேய அரசாட்சியிலும் பெண் கல்வியானது இன்னும் விருத்தி தசையை அடையவில்லையென்றால், இதைக்காட்டிலும் பரிதபிக்கத்தக்க விஷயம் யாதுளது? சென்ற 1901 வருஷத்திய கானிஷ்மாரி கணக்குப்படி நம்மிந்தியாவில் நூற்றுக்குப் பதின்மூன்று பெண்கள் எழுதப்படிக்கத்தெரிந்தவரெனத் தெரிகிறது. மற்ற 87 பெண்களின்கதியென்ன? இவர்களின் மூடத்தனம்

எத்தனை ஆடவரைக் கெடுக்கக்கூடியது? ஸ்திரீகள் புருடனைக் கட்டியாளும் ஒவ்வொரு விஷயத்திலும் நான்குமடங்கு மேம்பட்டிருப்பார்கள் என்று நீதிசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, 87 பெண்களின் மூடத்தனம் 348 ஆடவர்களின் மூடத்தனத்திற்குச் சமானமாம்; ஆதலால் "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்றபடி நடக்கவேண்டுமானால், புருடராகிய நாம் முன்னர் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பித்தல் அத்தியா வசியகமாம்.

(இன்னும் வரும்).

M. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுவரன் பேட்டை,
சென்னை.

பிராணி சாஸ்திரம்.

உலகத்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாம் ஜீவவர்க்கமென்றும், விருக்ஷவர்க்கமென்றும், தாதுவர்க்கமென்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஜீவவர்க்கத்தைப் பற்றிக்கூறும் நூலுக்குப் பிராணிசாஸ்திரமென்றும், விருக்ஷவர்க்கத்தைப் பற்றிக்கூறும் நூலுக்குத் தாவரசாஸ்திரமென்றும், தாதுவர்க்கத்தைப் பற்றிக்கூறும் நூலுக்குத்தாதுசாஸ்திரமென்றும் பெயராம். ஜீவவர்க்கத்திற்கும்மற்ற இரண்டு வர்க்கங்களுக்குமுள்ள வித்தியாசம் யாவருக்கும் நன்ருய்த் தெரிந்தவிஷயமே. மேற்சொல்லியமூன்றுபிரிவுகளிலடங்கிய எல்லாப்பொருள்களும்உயிருள்ளனவென்றும்உயிரில்லாதனவென்றும் இருவகைப்படும். ஜீவவர்க்கமும் விருக்ஷவர்க்கமும் உயிருடையவையாயினும், அவை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. ஜீவவர்க்கத்தி லடங்கியவை ஓரிடத்திலிருந்துமற்ருேரிடத்திற்குப் போகவும், தாமாக ஒருதொழிலைச்செய்யவும், விஷயங்களை இந்திரியங்களின் மூலமாய் உணரவும் விருத்திக்ஷயங்களுக்கு உடன்பட்டும் இருக்கின்றன, ஆனல் தாவரவர்க்கமோ வெனின், வளர்ந்த இடத்திலேயே அழியும் தன்மையுடையதே யன்றி ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குப் போகவும், உணரவும், தாமாக ஒரு தொழிலைச் செய்யவும் சக்தியுடையதன்று.

தெளிவாகக் கூறுமிடத்து ஆகாரத்தைப் புசித்தற்கு வாயும் புசித்த ஆகாரம் ஜீரணமாவதற்கு ஜீரணப்பையும் உடைய உயிருள்ள எல்லாப் பிராணிகளும் சேர்ந்தவகுப்பே ஜீவவர்க்க மெனப்படும். இவ்வர்க்கத்தில்

எத்தனையோ ஆயிரக்கணக்கான வகைகளுண்டு. இவ்வபரிமிதமான வகைகளுடைய வர்க்கத்தை இயற்கை விஷய சாஸ்திரிகள் அவ்வவற்றின் தேகவமைப்புக்கு ஒத்தவாறு அநேக பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவற்றில் முதன்மையான பெரியபிரிவுகள் இரண்டு; அவை முதுகெலும் புள்ளவை, முதுகெலும்பற்றவையாம். இவற்றில் முதுகெலும்புள்ள முதல் வகுப்பு நான்கு உட்பிரிவுகளை யுடையது. முதலாவது குட்டிபோட்டுக்குட்டியைப் பால்கொடுத்து வளர்க்கும் ஜெந்துக்கள். இவற்றில் மனிதன், குரங்கு,வெளவால்,திமிங்கிலம், நாற்கால்மிருகங்கள் முதலியவை சேர்ந்தவை. இரண்டாவதுபக்ஷிகள். மூன்றாவது ஊரும்ஜெந்துக்கள். நான்காவது மச்சங்கள். இரண்டாம் பெரியபிரிவான முதுகெலும்பற்றவைகளில், நத்தை சங்கு முதலியசதையுடம்புள்ளனவும் தேள் நண்டு முதலிய பொருத்துடம்புள்ளனவும் நக்ஷத்திரமீனைப்போன்ற சக்கராகாரமானவைகளும்அடங்கும்.

முதுகெலும் புள்ளன,முதுகெலும் பற்றன. இவற்றிற்குள்ள பேதம்.

முதுகெலும்பை யுடைய மனிதன், மிருகங்கள், பக்ஷிகள், ஊர்வன, மச்சங்கள் முதலியவற்றின் இரத்தம் சிவந்திருக்கும்; முது கெலும்பற்ற நத்தை, சங்கு,தேள்,பூரான், நண்டு முதலியவைகளுக்குச் சிவந்த இரத்தம் கிடையாது.

உஷ்ணமான இரத்தம் குளிர்ந்த இரத்தம், மனிதன் மிருகங்கள் பறவைகள் முதலியவற்றின் இரத்தம் உஷ்ணமாயிருக்கும். மற்ற ஊர்வன, மச்சங்கள், கோடானுகோடி பூச்சிகள், நண்டு, நத்தை, தேள் முதலியவற்றின் இரத்தம் குளிர்ந்திருக்கும்.

முதுகெலும்புள்ளவற்றில் குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் வகுப்பின் இலக்ஷணங்கள்,

I. தேகத்தின் மேல் மயிர் அடர்ந்திருக்கும்.

2. சுவாசாசயத்தினால் மூச்சுவிடும்.

3. சற்றேறக்குறைய எல்லாப் பிராணிகளும் தரையில் வசிக்கும். குரங்கு, வெளவால் மரங்களிலும், திமிங்கிலம் ஜலத்திலும் வசிக்கும்

4. கெட்டியான எலும்புகளையுடையன.

5. உஷ்ணமான சிவந்த இரத்தத்தை யுடையன.

—*Mammalia*—

குட்டிபோட்டுப் பால்கொடுத்து வளர்க்கும் வகுப்பில் அடங்கிய உட்பிரிவுகளாவன:—

1. மனிதஜாதி.
2. குரங்கினம்.
3. வெளவாலினம்.
4. பூச்சிகளைத் தின்னும் ஜந்துக்கள்.

5 அரிக்கும் ஜந்துக்கள்.

6 பல்லில்லாத ஜந்துக்கள்.

7. சாகபக்ஷணி.

A. ஒற்றைக் குளம்புள்ள.

B. இரட்டைக் குளம்புள்ள.

C. தடித்த தோலுள்ள ஜந்துக்கள்.

D. அடிவயிற்றில் பையுள்ள ஜந்துக்கள்.

8. மாமிசபக்ஷணி.

1. பூனையினம்.

2. நாயினம்.

3. கரடியினம்.

4. கீரியினம்.

9. திமிங்கில வினம்.

1. மனிதஜாதி.

கடவுளால் சிருஷ்டிக்கப் பட்ட பிராணிகளி லெல்லாம் மனிதஜாதி முதன்மையானது; இப்பிரிவைப்பற்றித் தெளிவாயுரைக்கப்புகின், இங்கு அசாத்தியமாகும்; ஆகவே, இதைத் தனியா யெழுதுவது நன்றாகும்.

2. குரங்கினம்.

மனிதஜாதியைச் சற்றேறக்குறைய ஒத்திருப்பது குரங்குசாதி. இதில் வானரம் (*Baboon*)வாலில்லாக்குரங்கு (*Orang -outang*) காட்டுமனிதன் கருங்குரங்கு முதலியவகைகள் அடங்கும். இவற்றின் கால்கள் நம்முடைய கால்களைப் போலவே அமைந்திருப்பதால் இவை நன்றாய் மரக்கிளைகளில் தாவியோடுதல் இலகுவாயிருக்கிறது; ஆகையாற்றான், இவற்றிற்கு நாற்கை மிருகங்க ளெனப்பெயராம். இவற்றில் சிலவற்றிற்கு நீண்ட வாலுண்டு; வாலை மரக்கிளைகளில் சுற்றிக்கொண்டு ஊஞ்சலாடும்.

கவிசிகாமணியாகிய காளிதாஸர்.

(முன்தொடர்ச்சி).

இக்கவிகோகிலத்தின் காலத்தை நாம் முற்கூறிய நவரத்தினங்களால் இழைக்கப்பெற்ற நன்மொழியினின்றும் ஆராய்ந்தறிய விரும்புவோமாகில், முக்கியமாக மூன்றுசங்கதிகளைச் சங்கைபறத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அவையாவன:— (1) மிலேச்சர்களை வதைத்துத் தன் நாமதேயத்துடன் ஸம்வத்ஸரத்தை ஸ்தாபித்து கிறிஸ்து பிறக்குமுன்

முதல்நூற்றாண்டில் செங்கோல் நடத்திவந்த "விக்கிரமாதித்தியன்" என்றஅரசனொருவன் இருந்தனனோ?

(2) அங்ஙனம் விக்கிரமாதித்தியன் என்றபெயருடன் அரசாண்டுவந்தவன் ஒருவன்தானோ? அன்றேல், ஒரேவமிசத்தில் உதித்த அரசர்களுக்கு அஃதொரு காரணப்பெயராகி வழங்கப் பட்டதா?

(3) கி. பி. ஆறுவது நூற்றாண்டில் அரசுபுரிந்த விக்ரமாதித்தியனின் ஆஸ்தானத்தில் முற்கூறிய கவிநவமணிகள் இருந்தனரோ?

கி. மு. முதல்நூற்றாண்டில் இப்பெயருடன் ஓரரசன் செங்கோல் நடத்திவந்தானென்பது கர்ணகர்ணிகையான ஐதீகமென்று சிலரின் கருத்து. ஆனால், ஜைனபண்டிதரான 'மேருதுங்கர்' என்பவர், தாமியற்றிய 'பாடாவலி' என்னுங் காப்பியத்திற் கூறுவதாவது:—

"'உஜ்ஜயினீ' நகரத்தில் 'நபோவாகன்' என்போனுக்குப் பின் பதின்மூன்று வருஷங்களாக 'கர்த்தபில்லன்' என்பவன் அரசுபுரிந்தான். அக்காலத்தில் 'காளிகன்' என்பான்தனது சகோதரியான 'ஸரஸ்வதி' என்பவளுக்குச் செய்த கொடுமையால் கர்த்தபில்லனை வேரோடொழித்து உஜ்ஜயினியில் சகவமிசத்தோரை ஸ்தாபித்தான். அவர்கள் ஆங்கு நான்காண்டளவும் அரசுசெலுத்தினர். கர்த்தபில்லனின் குமாரனான 'விக்கிரமாதித்தியன்' உஜ்ஜயினீராஜ்யத்தை மீட்டுக்கொண்டான். இவ்வரசகுமாரன் விக்ரமாப்தம் ஏற்படுத்தினன். இது வீரனென்பவன் ஏற்படுத்திய அப்தங்களுக்கு நானூற்றெழுபது ஆண்டுகளுக்குப்பின் நடந்த வரலாறு. விக்கிரமன் அறுபதுவருஷங்கள் உஜ்ஜயினியைப் பரிபாலித்தான். அவனதுகுமாரனான 'விக்கிரமசரித்திரன்' என்பவன் நாற்பது வருஷகாலம் அரசாண்டான். இவனுக்கு 'தர்மாதித்தியன்' என்று மறுபெயருமுண்டு. பிறகு பாஹிலன், நூஹிலன், நாஹதன் என்று மூன்றரசர்கள்கிரமமாக 11, 14, 10, வருஷங்களாக அரசு செலுத்தினர். வீரநிர்வாணனுக்கு 605 வருஷங்களுக்குப் பிறகு இப்பொழுது சகாப்தம் ஏற்படுத்தப்பட்டது."

பாடாவலியென்னும் கிரந்தத்தினின்றும் கிடைக்கப்பெற்ற இந்த விருத்தாந்தத்தினால் சகாப்தம் தொடங்கப் பட்டதற்கு 135

ஆண்டுகளுக்கு முன்னர் 'விக்ரமாதித்தியன்' என்றோரரசன் இருந்தானெனச் செவ்வனே விளங்குகின்றது. இவ்வரச னிருந்ததைப் பற்றிப் பலர் சந்தேகிக்கின்றனர். கி. மு. முதல் நூற்றாண்டில் விக்ரமாதித்தியன் என்றோரரச னிருந்தானென்பதற்குத் தகுந்த ஆதாரங்களில்லையென்பது அவர்களது கருத்து. கி. பி. 544-வது வருஷத்தில் கரூரில் கடும்போர் புரிந்து மிலேச்சர்களை வதைத்து உஜ்ஜயினியில்அரசாண்ட "விக்ரமஹர்ஷன்" என்பவனையே 'விக்ரமாதித்யன்' என்றும், அவன் முதல்நூற்றாண்டிலிருந்தான் என்றும், அவர்கள் ஊகிக்கின்றனர். புராதன கவிகளின் காலத்தையும் அரசர்களின் சரித்திரத்தையும் குறிப்பிடும்நூல்கள் வடமொழியிற் காண்பதற் கரியவையாயிருக்கின்றன. தற்காலம் யாவராலும் அறியப்பட்ட 'ராஜதரங்கிணி' என்னும் நூல் ஒன்றுமாத்திரமே பிரசித்தமாகவிளங்குகின்றது. அதன்ஒருபாகத்தில் 'பிரதாபாதித்தியன்' என்றபெயருடைய ஓரரசனதுசரித்திரம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வரசன் காச்மீரத்தில் அரசாண்டிருந்தான் இவன் விக்ரமார்க்கனுக்கு உறவினன். சிலர் இவனைச் 'சகாரி' (சகவமிசத்தோரின் சத்துரு) என்று தப்பாக நினைக்கின்றனர். "காச்மீரத்தரசனான 'ஹிரண்யன்' இறந்தபின் உஜ்ஜயினியில் விக்ரமாதித்தியன்' என்று மிகவும் கீர்த்திபெற்ற மன்னனொருவனிருந்தான். இவனுக்கு 'ஹர்ஷன்' என்று மற்றொருபெயருமுண்டு. இவனே சகவமிசத்தோரை நாசஞ்செய்தவன்" என்று சிலர் உரைக்கின்றனர். மற்றுஞ்சிலர் "கரூர்ச்சண்டையில் சகரை உதைத்தவன் உஜ்ஜயினியிலிருந்த 'ஹர்ஷவிக்ரமாதித்தியன்;' அவன் கி. பி. 550ம் வருஷத்தில் இறந்தான். கரூரில் போர்நடந்தகாலம் கி. பி. 544" என்று சொல்லுகின்றனர். இவ்வாறு பற்பலமேதாவிகள் பற்பல விதமாகப் பரஸ்பரம்அபிப்பிராயபேதங்களை ஆகோஷித்தும்,கிறிஸ்துபிறப்பதற்கு முன்னோ அல்லது பிறந்ததற்குப் பிறகுதானோ காளிதாஸரின் ஜீவகாலம் என்பதற்குத் தெளிவான ருஜுக்கள் காணப்படவில்லை. கல்வித்திறமையிலும் மதுரமான கவிதையெழுதும் சாமர்த்தியத்திலும் இயற்கையமைப்பை வர்ணிக்கும் சாதுரியத்திலும் மற்றக்கவிகளுக்குமுன் இக்கவிசிரோமணியே நம்மனத்தினிடமுதிப்பதுபோல, காலத்திலும் இம்மகாகவி மற்றக்கவிவாணர்களுக்கு முன்னதாகவே வாழ்ந்திருக்கலாம்.

(இன்னும் வரும்).

A. K.

மஹோப நிஷத்.

ஆப்யாயந்த்விதி சாந்தி:

இப்பொழுது மஹோபநிஷத்தைச்சொல்லுகிறோம். அதைக் குறித்து (பிரஹ்ம வித்தையைக் குறித்துப் பின்வருமாறு) சொல்வர். ஏகமாகவே நாராயணரல்லவோ இருந்தார். (அப்பொழுது) ஈசானன் (சிவன்) இல்லை, ஜலங்களில்லை, அக்நிசந்தர்களில்லை, இப்பூமி ஆகாசங்களில்லை, நக்ஷத்திரங்களில்லை, சூரியனில்லை, நர நாராயணன் ஒருவனே ஏகாங்கியாய் ஒருவனாய்(இருந்தான்). தியானத்திலிருக்கு'மவனிடம் யஞ்ஞக்கூட்டங்கள் (உண்டாயின) என்றுசொல்லப்படும். அவனிடமிருந்து பதினான்குபுருஷர்கள்உண்டானார்கள். ஒருகன்னிகையும்(உண்டானாள்). பத்திந்திரியங்கள்பதினொன்றாவதான மனம் பன்னிரண்டாவதான தேஜஸு, பதின்மூன்றாவதான அஹங்காரம், பதினான்காவதான பிராணன் ஆத்மா, பதினைந்தாவதான புத்தி, பஞ்சதன்மாத்திரைகள், பஞ்சமகா பூதங்கள் (என்னுமிவையுண்டாயின) அவன் இருபத்தைந்தாவதானபுருஷன்; அப்புருஷனே புருஷன்; அவனிடமிருந்து பிரதான ஸம்வத்சரங்கள்(வருஷங்கள்) உண்டாயின. வருஷத்திலிருந்து அதிகமாக(மற்றவைகள்) உற்பத்தியாயின (என்று பெரியோர் சொல்வார்). (1)

[குறிப்பு] நாராயணன்- ஜலங்கள் (நாரா:) எவனுக்கு இருப்பிடமோ (அயநம்) அவன் நாரயணன். நாராயணர் உரையில் பின்வரும் மனுவாக்கியத்தை (1. 10.) உதாகரித்திருக்கிறார். ஜலங்கள் நரனிடமிருந்து உற்பத்தியானமையால் நாரங்களென்று சொல்லப்படும். அந்த ஜலங்கள் எவனுக்கு இருப்பிடமோ அவன் நாராயணனென்று சொல்லப்படும். அல்லது நரனிடமிருந்து அஃதாவது ஆத்மாவினிடமிருந்து உற்பத்தியான ஆகாசம் முதலிய தத்துவங்கள் நாரங்கள். அவை எவனுக்கு அயனமோ (வியாபித்து நிற்கவிடமோ) அவன் நாராயணன். அல்லது நாரங்களுக்கு அஃதாவது தத்துவங்களுக்கு அயனம்; அஃதாவது லயஸ்தானம் ஏவனோ அவனே நாராயணன். சங்கரானந்தர் உரையில் இன்னும் இரண்டுவிதமாகப் பொருள் செய்திருக்கிறார்.

1. ஆரங்கள் என்பன துக்கத்திற்குக்காரணங்கள். ஆரங்களல்லாதவை அஃதாவது சுகத்துக்குக்காரணமான பிரஹ்மசர்யம் முதலியசாதனங்கள் நாரங்கள். நாரங்கள் எவனுக்கு அயநமோ அஃதாவது அவனை அடைவதற்கு மார்க்கமோ அவன் நாராயணன்.

2. அரங்களேன்பன சம்சாரமாகிய சக்ரத்திற்கு ஆதாரமான குத்துக்கால்களுக்குச் சமானமான காமக்குரோதாதிகள். இவ்வரங்களுக்கு அயநம் (இருப்பிடம்) அவித்தியை; அராயணமாகும். அராயணமல்லாதது அஃதாவது ஆநந்த ஸ்வரூபியான ஆத்மா நாரயணன், அல்லது நாராயணவதாரத்தில் நிவிருத்திமார்க்கத்தைத் தேடுவோருக்குப் பரமகுருவாகிய நாராயணன் - யஞ்ஞஸ்தோமம் - (யஞ்ஞத்தின் கூட்டங்கள்) என்பது சங்கராநந்தர் பாடம், நாரயணர் யந்நஸ்தோமம் என்றுபடிக்கிறார்; அஃது அவ்வளவு சரியாய்த் தோற்றவில்லை.

புருஷர்கள் பதினன்கு - புரத்தில் (சரீரத்தில்) சயனிப்போர் (இருப்போர்) புருஷர்கள். இவைபதினன்கும்புத்தி தத்துவத்தைத் தவிர்த்துப் பின்சொல்லும் பதினன்கு தத்துவங்கள்-கன்யை என்பது சுகத்தைக் கொடுப்பதான புத்தி என்பர் சங்கராநந்தர். தேஜஸ் என்றால் மஹத்தத்துவமென்பது நாராயணருரை. பின்னர் மஹத்தத்துவமாகிய புத்தியைக்கருதியே வேறாய்ச் சொல்லுதலாவிது சரியெனத் தோற்றவில்லை. சங்கராநந்தர் இதற்கு ஜடராக்னி அல்லது தேஜோமனம் (சுத்தமனம்) எனப்பொருள் சொல்லுகிறார்.

ஆத்மா வென்கிற பதத்தை நாராயணர் பிராணன்கள் என்பதோடு சேர்த்து, பிராணன்கள் பதினன்காவதான ஆத்மா (அஃதாவது முன்சொன்ன புருஷர்களில் ஒன்று) என்றுசொல்வர். சங்கராநந்தர் ஆத்மா வென்பதைப் பதினைந் தாவதான புத்தி என்பதுடன் சேர்த்து அது முன்னரே கன்யை என்று சொன்ன புத்தியைக் குறிக்கு மென்பர்.

நாராயணர் தேஜஸ் என்பதற்கு மஹத்தத்துவ மென்றுரை சொல்லி அதிலிருந்து அகங்காரமும், அகங்காரம் மூன்று கூறாக, அதன் சாத்துவிக பாகத்தினின்றும் புத்தி மனம் சித்தம் தேவர்களும், ராஜச பாகத்தினின்றும் பிரவிருத்தி சுவபாவமுள்ள இந்திரியங்களும், தாமச பாகத்தினின்றும் தன்மாத்திரைகளும் அவற்றி

னின்றும் பஞ்ச பூதங்களுமுண்டாயினவென்று உபநிஷத்கூறுமென்பர். அவன் இருபத்தைந் தாவதான புருஷன் என்பது சங்கராநந்தர் பாடத்தையும் உரையையும் ஒட்டி எழுதப்பட்டது. ஆயினும்இதில்ஒருசந்தேகமுண்டு.ஏனெனின், பதினைந்தாவதானபுத்தியுடன் பஞ்சதன் மாத்திரைகளையும் பஞ்ச பூதங்களையும் சேர்க்க இருபத்தைந் தாகிவிடும். ஆகவே புருஷன் என்பதை ஆத்மாவாகிய நாராயணன் என்று சங்கராநந்தரை அநுசரித்து அர்த்தம் செய்வது ஒவ்வாது. நாராயணரோ அதற்கு இவ்விருபத்தைந்தின் சமஷ்டி புருஷனெனப் படுமென்று உரையிடுகிறார். அப்புருஷனே புருஷன்; அஃதாவது அவனே ஆத்மாவாகிய நாராயணன். இது சங்காரநந்தர் பாடம். நாராயணரோஅப்புருஷனைப்புருஷன் பிரவேசித்துஎன்று படிக்கிறார். அஃதாவது இத்தத்துவக் கூட்டமான புருஷனைப் பரமபுருஷனாகிய நாராயணன் பிரவேசித்து அஃதாவது அந்தர்யாமியாய் இருந்தார் என்பது பொருள் கூறுகின்றார். பிரதான சம்வத்சரங்கள் இதற்கு மனுஷிய வருஷங்கள் அல்லது பிரதானரூபமான அஃதாவது அவ்யக்தரூபமான வருஷங்கள் காலதத்துவமென்பது சங்கராநந்தர் உரை. நாராயணர் பாடப்படி பின்வருவது மொழிபெயர்ப்பாகும்.

மு - கே - நாராயணசாமி ஐயர்,
பீ - ஏ - பீ- எல்.

வர்த்தமானம்.

சிருங்ககிரி
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்
விதேகமுத்தி யெய்தனர்.

ஸ்ரீ சங்கர பீடம் நான்கனுள், ஒன்றாய சிருங்ககிரியில் 33-வது பட்டம் பெற்றிருந்த ஸ்ரீ சச்சிதாநந்த சிவாபிநவ நரசிம்மபாரதீ சுவாமிகளவர்கள் மார்ச்சுமாதம் 20-ந்தேதி புதவாரம் பகல் 11-மணிக்கு விதேகமுத்தி யடைந்தனரென்று கேட்க அதிகவியசன மடைகின்றோம். இது ஸ்ரீ சங்கராசாரிய சிஷ்யகோடிக ளெல்லோருக்கும் மிக வியசனகரமாகவே யிருக்கும். இச்சங்கர பீடத்தில் 11-வது, 22-வது பட்டங்களில் எழுந்தருளி யிருந்தோர் ஆதி சங்கரரைப்போன்றே யிருந்தார்க ளென்று தெரிகின்றது. அங்ஙனமே 33-வது பட்டத்தி லெழுந்தருளி யிருந்த விவரும் கல்வி கேள்விகளில் வல்லுநரும், வேதோக்தமான கிரியைகளிற் பிறழாது நடப்பவரும், சாந்த சீலரும், சதா நிஷ்டாபருமாயிருந்தனர். இவரது மகிமையை யுணர்ந்த சற்குணமுள்ள பலர் இவரை யடுத்துத் தமது இஷ்டப் பிராப்தியை யடைந்திருக்கின்றன ரென்பது பிரசித்தமாம்.

இவர் தமது பீடத்தாசிரியராய் உலக முய்யும்பொருட்டெழுந்தருளியிருந்த ஸ்ரீ சங்கர பகவத் பாதாசாரிய ரவர்களின் ஜனன பூமியாகிய ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பூஜ்ய சங்கர பகவத் பாதரையும், ஸ்ரீ சாரதாம்பாளையும் பிரதிஷ்டை செய்து ஷிகாலடியென்னும் திவ்ய க்ஷேத்திரத்தைப் புனித மாக்கினார். அதற்கு ராஜாக்களும் கனவான்களும் மிகுதியாகப் பொருளுதவி செய்து தாங்களும் அங்குச் சென்றிருந்தனர். இவ்வரிய பெரிய செயலேயன்றி இவர் பெங்களூரில் ஒரு சம்ஸ்கிருத லைபிரெரி ஸ்தாபித்தற் பொருட்டு லட்சரூபாய் செலவழித்துச் சங்கராபுரமென் றொருமடங் கட்டியிருக்கின்றனர். இதுவேயுமன்றி வேறு பல தர்ம ஸ்தாபனங்களும் செய்திருக்கின்றனர். இவருடைய சரித்திரம் அத்யற்புதமாக விருத்தலின், அதனால் இவர் அவதார

புருஷரென்று கருதப்படுகின்றனர். இவருடைய பிரிவு அத்வைத வித்தையின் விருத்திக்குக் குறைவேயாம்.

சுமார் பதினைந்து வருடங்கட்கு முன்னர் இம்மகாத்மாபெரு முயற்சிசெய்து சாதுசங்கமொன்றேற்படுத்தி, அதன் வாயிலாக அத்வைத வேதாந்தத்தைப் பரவச் செய்யுமாறு சந்நியாசிகளைக் கூட்டி, அவர்களை நமது தேசத்திற் பலவிடங்கட்கு மனுப்பி உபந்நியாசஞ் செய்ய ஏற்பாடொன்று செய்திருந்தனர். அவ்வேற்பாடு யாது காரணத்தினுலோ முற்றுப் பெறவில்லை; அது முற்றுப்பெறுமைக்குக் காரணம் நமது கவர்ன்மெண்டாரின் ஆட்சேபமா மென்று தெரிகின்றது. இஃதிவ்வாருயது வியசனிக்கத்தக்க விஷயமேயாம்.

நரபலி:—பிஜாபூருக் கருகிலிருக்குங் காட்டில் சில பெண்கள்விறகு பொறுக்கிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒரு பெண்ணை ரகுநாதனென்பவன் பிடித்துத் தூக்கிக்கொண்டு போய்த் தான் முன்னமே பலிகொடுப்பதற்காகத் தோண்டிவைத்திருந்த குழியிற் போட்டுத் தேவியைக் கூவி உன் பிரீதியார்த்தமாக இந்தப் பெண்ணைப் பலியிடுகிறே னென்று அப்பெண்ணின் தலை மீதும் முதுகின் மீதும் இரண்டு பெருங்கற்களைப் போட்டுக் குழியை மூடிவிட்டனன். இச்சமாசாரத்தைக் கேள்வியுற்று பெண்ணின் தாயார் சிலருடன் சேர்ந்து வருவதை ரகுநாதன் கண்டு அவர்களைத் தன் கையிலிருக்குங் கழியாற்ருக்கிக் கொன்று விடுவேனென்று பயமுறுத்தினன். பின்னர் அவனைப் போலீசார் பிடித்துக்கொண்டனர். அவன் செய்த கொலைக்காகப் பீஜாப்பூர் செஷன்ஸ் ஜட்ஜியவர்கள் அவனுக்கு மரண தண்டனை விதித்தனர். இக்கேசு அலகாபாத் ஹைகோர்ட்டில் மேல் விசாரணை செய்யப்பட்டுக் கீழ்க்கோர்ட்டுத் தீர்மானம் உறுதி செய்யப்பட்டது.

பெருங்காளான்:—ஜர்மெனியிலுள்ள பிட்ஸ்பர்க் நகரத்தில் ஒரு விளை நிலத்தினின்றும் பிடுங்கிய காளானென்று 33-பவுண்டு நிறையள விருந்ததாம். அதன் குடையின் குறுக்களவு ஒரு கஜமாம். இது 48-மணியளவு வயதுடையதாம்.

ஒரு மிகப் பழைய படகு:— பார்ட்டில்லே மீயர் என்னுமூரில் படகொன்று தோண்டியெடுக்கப்பட்டது. அப்படகி

ளுள்ள சில முக்கியக் குறிகளால் அது 2000 - வருடங்கட்கு முன்னர்ச் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றதாம்.

ஒரு விநோத வீடு:—யோகஹமாவி லிருக்கும் டாக்டர் ஒருவர் தொத்து வியாதிகட்குக் காரணமாய கிருமிகள் சேராவண்ணம் ஒரு மாளிகை கட்டியிருக்கின்றனர். அம்மாளிகையின் சுவர்கள் கனத்த கண்ணாடித் துண்டுகளால் செய்யப்பட்டிருக்கின்றன. கண்ணாடிகள் குழாய் வடிவினவாம். அவற்றுள் சோடாவுப்புக் கலந்த திராவகம் விடப்பட்டிருக்கின்றது. அத்திராவகம் அறையின் சீதோஷ்ணத்தைத் திட்டப்படுத்துகின்றது. ஜன்னல்கள் காற்றுப் புகாவண்ணமாக அமைக்கப்பட் டிருக்கின்றன. அவற்றால் காற்றுச் சுத்தப்படுத்தப்பட்டு உள்ளே பிரவேசிக்கச் செய்யப்படுகின்றது.

கப்பல்களி லச்சிடும் சமாசாரப் பத்திரிகைகள்:—கப்பல் யாத்திரை செய்பவர்கள் ஆங்காங்கு நடைபெறும் விஷயங்களை யறிவதற்குச் சாதன மில்லாமைபற்றிச் சிலர் மார்க்கோனி என்பவர் கண்டு பிடித்த கம்பியில்லாத மின்சாரத் தந்தி யினுதவியால் ஆங்காங்கு நடைபெறும் விஷயங்களை யறிந்து கப்பல்களிலேயே, சமாசாரப் பத்திரிகளை யச்சிட்டு, அங்குள்ள அபிமானிகளுக்குத் தருகின்றனர். ஜர்மானிய பிரான்சுக் கப்பல்களிலே இவை நடைபெறுகின்றன.

சுருட்டுப் பிடிக்கும் ஸ்திரீகள்:- அமேரிக்காவில் ஸ்திரீகள் சுருட்டுப் பிடித்தல் கூடாதென்று சட்டமொன் றேற்படுத்தப்பட்டிருக்கின்றது. நீயூயார்க்கிலுள்ள ஓட்டலொன்றில் இச்சட்டம் அனுஷ்டானத்திற்கு வாராமைபற்றி யங்குக் கணக்கற்ற ஸ்திரீகள் வந்து சேருகின்றார்கள்.

இரண்டு பர்மியஸ்திரீகளின் வீரதீரம்:—இரண்டு பர்மியஸ்திரீகள் தமது வீட்டைக் கொள்ளையடிக்க ஓரிரவு வந்த பர்மியனொருவனைக் கீழேதள்ளிப் போலீசார் வருகிற வரையில் பிடித்திருந்தனர். அவர்களுடைய தீரத்தன்மைக்கு மெச்சி ஹந்தவாடி டிப்டி கமிஷனர் அவர்கட்கு இரண்டு வெள்ளிக் கிண்ணங்கள் பரிசாக அளித்தனர். கோர்ட்டாரால் அப்பர்மியனுக்கு 6-மாதம் கடுங்காவற்றண்டனை விதிக்கப் பட்டது.

ராஜதம்பதிகளின் சிலா வுருவங்கள்:-டில்லிமாநகரில் மகாராஜா சக்ரவர்த்தியாரவர்களின் சிலாவுருவமொன்று அமைப்பதாகக் குவாலியர் மகாராஜா கூறியவுடன், மகாராணி சக்ரவர்த்தினியாரவர்கட்கும் ஒரு சிலாவுருவமமைப்பதாகப் பிக்கானிர் மகாராஜா கூறினர்.

சூரியகிரணங்களின் பயன்:— அமெரிக்கா கண்டத்தின் சில பாகங்களிலுள்ளவர்கள் சூரியகிரணங்களைக் கண்ணாடி வாயிலாக வேற்று, உஷ்ணத்தை யதிகமாகச் செய்து அதன் வாயிலாக நீராவியை யுண்டாக்கி அந்நீராவியி னுதவியால் ஜலமிறைக்கும் யந்திர முதலிய வற்றை உபயோகிக்கின்றூர்களாம்

தேனெடுக்கும் யந்திரம்:—இலங்கையில் ஈக்களுக்குக் கேடுண்டாகாதவாறு தேனெடுக்கும் யந்திரமொன்றை யங்குள்ளார் கண்டு பிடித்து, உபயோகப் படுத்தி வருகின்றூர்கள்.

ருஷியாவில் வழங்கும் பாஷை:—ருஷியாவில் ஏறக்குறைய 60 பாஷைகள் வழங்கப்பட்டு வருகின்றனவாம்.

வெந்நீர்க்குழாய்:—லண்டன்மாநகரத்தில் வீடுகள்தோறும் மின்சார வாயிலாக வெந்நீர்க் குழாய் வைக்க வேற்பாடு செய்யப் பட்டு வருகின்றது.

அடைக்கலங் குருவி:—இது மணி யொன்றற்கு 72 மைல் தூரம் பறந்து செல்லும் சக்தியுடையதாம்.

புத்தகசாலை:—அமெரிக்காக் கண்டத்துள்ள ஆண்ட்ரூகார்னகி யென்னும் பிரபு தமது நாட்டிலும் பிரிட்டனிலும் 2,200 புத்தக சாலைகள் ஸ்தாபித்திருக்கின்றனர். இதுமிகப் பெரிய தர்மமாம்.

ஜப்பான் ஸ்திரீகள்:—இவர்கள் இரண்டொரு வருஷகாலமாக ஜப்பான் தேசத்துள்ள கம்பெனிகளிலும் வர்த்தகசாலைகளிலும் குமஸ்தாக்களாக நியமிக்கப்பட்டு வருகின்றூர்கள். இவர்கள் புருஷர்களைப் பார்க்கிலும் சாமர்த்திய முடையவர்களாக நடந்து கொள்ளுகிறூர்கள். டோக்யோ, யோகஹாமா முதலிய முக்கிய பட்டணங்களில் எல்லா உத்தியோகங்களிலும் ஸ்திரீகள் நியமிக்கப்பட்டு வருகின்றூர்கள்.

ஆங்கிலேய ராஜ்ஜியத்தின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும்:—உலகத்தில் ஆங்கிலேய ராஜ்யத்தின் விஸ்தீரணம் ஒரு

கோடியே பன்னிரண்டு லட்சம் சதுரமயிலாம்; அதில் வசிக்கும் ஜனங்களின் தொகை 41 கோடியாம்; அந்த 41 கோடியுள் இந்தியாவில் வசிக்கும் ஜனங்களின் தொகை 31 கோடியாம்.

ஓட்கோடுக்கும் சுதந்திரம் ஸ்தீரீகளுக்கு முண்டு:—திருவாங்கூர்க்கவர்ன்மென்டார் ரிதுகாறும் ஜனங்களுக்கு முனிசிபல் கௌன்சிலின் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்குஞ் சுதந்தரத்தைக் கொடாமலிருந்தார்கள்; ஸ்திரீகளும் முனிசிபல் கௌன்சிலரை நியமிக்க வோட் கொடுக்கலாமென்று மனுமதி தந்திருக்கின்றனர்.

சிறுபெண்களுள் விதவையா யிருப்பவர்களின் தொகை:—இப்போது இந்தியாவில் 6,000,000 சிறுமிகள் 11வயதிற்குமேல் 15 வயதிற்குள் விவாகஞ்செய்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் 2,500,000 சிறுமிகள் 11 வயதுக்குட் பட்டவர்கள் என்றும், 4,00,000 சிறுமிகள் விதவைகள் என்றும் தெரிகின்றன.

ஆங்கிலேயச் சிறுமிகள்:—லண்டனில் ஆங்கிலேயச் சிறுமிகளைக் குடும்பநிர்வாக முறையில் பழக்கிவைக்கும் பொருட்டு ஏற்பட்டுள்ள சிங்கஸ் காலேஜ் என்பதை யனுசரித்து, ஒருமுயற்சி செய்யப்படுகிறதென்றும், அதனை லண்டன் யூனிவர்சிட்டி அங்கீகரித்திருக்கிறதென்றும தெரிகின்றன. இதற்கு வேண்டிய மூலதனத்தின் நிமித்தம் 50 ஆயிரம் பவுண்டு கைபொப்பம் செய்யப்பட்டிருக்கின்றதாம்.

குடியைக் குறைக்குஞ் சட்டம்:—ஜப்பான் கவர்ன்மெண்டார் சின்னஞ் சிறுவர்கள் குடித்தல் கூடாதென்று ஒரு சட்ட மேற்படுத்த வுத்தேசங்கொண் டிருக்கின்றனர். இவ்விதமான சட்டம் நமது தேசத்தி லேற்படுமாயின், தேச க்ஷேமத்திற்கேதுவாம்.

ஸ்திரீ வக்கீல்கள்:—ருஷயக் கவர்ன்மெண்டார் ஸ்திரீள் வக்கீல் வேலைகளுக்குத் தகுதி யுள்ளவர்களென்றும், அவர்கள் வக்கீல் பரீட்சைக்குப் படிக்கலாமென்று முத்தாவளித் திருக்கின்றனர்.

நமது தேசத்திலுள்ள இந்துக்களின் தொகை:—நமது தேசத்தி லிப்போ துள்ளசுமார் $31\frac{1}{2}$ கோடி ஜனங்களுள், (வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட) இந்துக்களின் தொகை $21\frac{1}{2}$ கோடியாம்.